Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள்: 06 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆனி மீ 3 ஆம் உ ஞாயிற்றுக்கிழமை (17 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 23 ஓசை 119

## கடற்படை பிடித்தது மீன் படகுதான்!

(வல்வெட்டித்துறை)

வல்வைக்கடலில் கடற்படையினர் செடுபிடி. மீன்பிடிக்கச் சென்ற றோலருடன் மூன்று மீனவர்களையும் கடற்படை பிடித்துச் சென்றது. நேற்றுக்காலை 8.30 மணியளவில் வல்வை கடற்பகுதியில் மேற்படி சம்பவம் நடைபெற்றது. வல்வெட்டித்துறையைச்சேர்ந்த மீனவர்கள் அதிகாலை 5.00 மணியளவில்றோலருடன் கடலுக்குச் சென்று மீன்பிடித்துக் கொண்டிருக்கும் வேளையிலேயே மேற்படி கடற்படையினரால் கைதுசெய்து காங்கேசன்துறை மேல்கடல் நோக்கிக் கொண்டு சென்றார்கள். கரையில் இருந்து சுமார் ஒருமைல் அளவு தூரத்தில் கடற்படையினரால் கைதுசெய்து (றோலரும் மீனவரும்) கொண்டு செல்லப்பட்டதை கடற்கரையில் இருந்து பலரும்காணக் கூடியதாக இருந்தது. றோலரில் மீன் பிடிக்கச்சென்ற வாலிபர்களான திரு. மேனிபாஸ் திருக்குமரன் (வயது 20) நவாலிங்கம் ரவீந்திரன் (வயது 24) ரகுபதி கணேசாந் (வயது 17) ஆகிய மீனவர்கள் விடுவிக்கப்படாமையால் வல்வை மீனவர் சங்கத்தலைவர் திரு. ந வைத்திலிங்கம் இவர்கள் விடயமாக மேலிடங்களுடன் தொடர்பு கொண்டுள்ளார். (-68)

# நேற்று மாலை முதல் போர் நிறுத்தம் அமுல்

## தலைவர் பிரபா போராளிகளுக்கும் பிரேமா ராணுவத்துக்கும் கட்டளை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த ஆறு தினங்களாக ஸ்ரீலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்குமிடையில் நடந்து வந்த போர் நீதி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் நாற்பத்தெட்டு மணி நேரத்தில் இரண்டு தடவைகள் யாழ்ப்பாண வந்து பத்து மணிநேரம் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் நேற்று மாலை ஆறு மணியிலிருந்து நிறுத்துவதற்கு இருதரப்பும் இணங்கின.

நேற்று இப் பேச்சுவார்த்தையின்போது விடுதலைப்புலிகள் சார்பில் விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணி தலைவர் கோ. மகேந்திரராசா மாத்தயா, மக்கள்முன்னணி செயலாளர் யோகரட்ணம் யோகி, விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் ஆகியோருடன் திருமதி அன்ரன் பாலசிங்கமும் பேச்சுகளில் கலந்து கொண்டார்.

சுமார் ஏழுமணி நேரம் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகளின்போது அமைச்சர் ஹமீட்டும் விடுதலைப்புலிகள் தலைவர்களும்தத்தமது தலைவர்களுடன் இடையிடையே தொடர்புகொண்டு கலந்து ஆலோசித்தனர். இதில் தலைவர் மகேந்திரராஜாமாத்தயாவும் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் தொடர்புகொண்டு கதைத்ததுடன் அமைச்சர் ஹமீட் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவுடனும் முப்படைகளின் தளபதிகளுடனும் தொடர்பு கொண்டும் கலந்தாலோசித்தனர்.

காலை பத்து பணியளவில் வந்த அமைச்சர் மாலை ஐந்து மணியளவில் கொழு

## ஹமீத் முன்னிலையில் டொமினிக்கை நோக்கிச் சூடு!

(யாழ்ப்பாணம்)

இராணுவச் சிப்பாய்கள் துப்

னிக் அவர்கள் பலாலி விமான

## புலிகளுக்கு மொசாட் பயிற்சி

(கொழும்பு)

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் விடுதலைப் புலிகளுக்கு இஸ்ரேல் மொஸாட் பிரிவினர் போர்ப்பயிற்சி வழங்கி வருவதாக நேற்றுமுன்தினம் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் சபாநாயகர் எம். எச். எம். முஹம்மது தெரிவித்தார்.

லலித்அத்துலத்முதலி தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த சமயம் இஸ்ரேலிய உளவு ஸ்தாபனமான மொஸாட், கூலிப்படையான எஸ். ஏ. எஸ் பிரிவுகளின் உதவியை ஸ்ரீலங்கா அரசு பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## 400 பேர் விடுதலை

(கொழும்பு)

கொழும்பிலும், அதன் சுற்று வட்டாரங்களிலும் நேற்று வரை 1,600 தமிழ் இளைஞர்களைப் பொலிஸார் சுற்றி வளைத்துப் பிடித்துள்ளனர். இவர்களில் 400 பேர் விசாரணையின்பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்களென அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யுத்த நிறுத்தம்வரை கும்புறுமுனையில் யுத்தம்

(கும்புறுமுனை)

நேற்று மாலை ஆறு மணிக்கு யுத்தநிறுத்தம் அமுலுக்கு வரும்வரை மட்டக்களப்பு கும்புறுமுனை சிறிலங்கா இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மிக நெருக்கமான நிலையில் சண்டை நடைபெற்று வந்தது. தற்போது இந்த முகாமில் பெரும்பகுதி விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் இடைவிடாத தாக்குதலால் இராணுவத்தினர் மூன்று நாட்களாக உணவு வசதியெதுவுமின்றி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## யுத்தக்கப்பல்மீது றொக்கட் தாக்குதல் கப்பலுக்கு பலத்த சேதம்

### விபத்தில் ஐந்துபுலிகள் பலி

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறைக் கடலில் நின்ற ஸ்ரீலங்கா யுத்தக்கப்பல் மீது விடுதலைப்புலிகள் றொக்கற் தாக்குதல் மேற்கொண்டதனால் அக்கப்பல்பலத்தசேதத்திற்குள்ளாகியது.

காங்கேசன்துறையில்தரித்து நின்று கரையோரப் பகுதி நோக்கி பீரங்கித் தாக்குதல் செய்து வந்த யுத்தக் கப்பல் ஒன்றின்மீது மேற்கொண்ட ஏவுகணைத்தாக்குதலில் அந்த கடற்படைக் கப்பலின் இயந்திர அறைகம்பியூட்டர் கட்டுப்பாட்டறை ''றடார்'' சாதனம் என்பன உடைத்தெறியப்பட்டுள்ளன.

இதனால் அக்கப்பல் நகரமுடியாத நிலையை அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைபறிச்சான் இராணுவ முகாம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த ஆறு தினங்களாக ஸ்ரீலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்குமிடையில் நடந்து வந்த போர் நீதி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் நாற்பத்தெட்டு மணி நேரத்தில் இரண்டு தடவைகள் யாழ்ப்பாண வந்து பத்து மணிநேரம் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் நேற்று மாலை ஆறு மணியிலிருந்து நிறுத்துவதற்கு இருதரப்பும் இணங்கின.

நேற்று இப் பேச்சுவார்த்தையின்போது விடுதலைப்புலிகள் சார்பில் விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணி தலைவர் கோ. மகேந்திரராசா மாத்தயா, மக்கள்முன்னணி செயலாளர் யோகரட்ணம் யோகி, விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் ஆகியோருடன் திருமதி அன்ரன் பாலசிங்கமும் பேச்சுகளில் கலந்து கொண்டார்.

சுமார் ஏழுமணி நேரம் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தைகளின்போது அமைச்சர் ஹமீட்டும் விடுதலைப்புலிகள் தலைவர்களும்தத்தமது தலைவர்களுடன் இடையிடையே தொடர்புகொண்டு கலந்து ஆலோசித்தனர். இதில் தலைவர் மகேந்திரராஜாமாத்தயாவும் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் தொடர்புகொண்டு கதைத்ததுடன் அமைச்சர் ஹமீட் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவுடனும் முப்படைகளின் தளபதிகளுடனும் தொடர்பு கொண்டும் கலந்தாலோசித்தனர்.

காலை பத்து மணியளவில் வந்த அமைச்சர் மாலை ஐந்து மணியளவில் கொழும்பு திரும்பினார். (அ)

# ஹமீத் முன்னிலையில் டொமினிக்கை நோக்கிச் சூடு!

(யாழ்ப்பாணம்)

நேற்று அமைச்சர் ஹமீத்தை அழைத்துவரச் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் மீது திடீரென இராணுவச் சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது திரு. டொமினிக் சடுதியாக நிலத்தில் வீழ்ந்து படுத்து உயிர் தப்பிக்கொண்டார்.

அமைச்சர் ஹமீத்தைஅழைப்பதற்காக நேற்று திரு. டொமினிக் அவர்கள் பலாலி விமான தளத்திற்குசென்று விடுதலைப் புலிகளின் காவல் அரண் ஒன்றிலிருந்துவெளிப்பட்டு முகாம் பகுதியில் நின்ற அமைச்சர் ஹமீத்தை அழைத்தபோது

(6ஆம் பக்கம் பார்க்க)

# போரை நிறுத்த பிரபாகரன் பிராந்தியத் தளபதிகளுக்கு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பேச்சுவார்த்தையில் இருதரப்பும் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள இணக்கம் காணப்பட்டதைத் தொடர்ந்து தலைவர் வே. பிரபாகரன் அனைத்து பிராந்தியத் தளபதிகளுக்கும் யுத்த நிறுத்தத்தை உடன் கடைப்பிடிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் நல்லூரில் நடைபெற்ற பேச்சுகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் முன்வைத்த யோசனைகளை இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொண்டு அவற்றை உடனடியாக நடைமுறைப் படுத்த உடன்பட்டதைத்தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகள் போர்நிறுத்தத்திற்கு உடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்தம் தொடர்பாக அரசாங்க அறிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அமைச்சர் ஹமீத்திற்கும் இடையில் நேற்றுநடைபெற்ற பேச்சுவார்த்தைகளைஅடுத்து நேற்றுமாலை 6 மணியுடன் ஆயுத தாக்குதல்களை இருதரப்பினரும் நிறுத்துவதென முடிவு செய்யப்பட்டதாக அரசாங்கம் அறிவித்தது.

ஆயுதப்படையினரும்நேற்று மாலை 6 மணியுடன் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

மூடப்பட்ட சகல பொலிஸ் நிலையங்களையும் மீண்டும் திறப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மிகுதியான விடயங்கள் குறித்துபேச்சுவார்த்தைகள்மூலம் தீர்வு காணப்படவுள்ளது.

காயமடைந்தவர்களுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாலையில் ஷெல் அடியும், ஹெலி சூடும்; பீரங்கித் தாக்குதலும்

நேற்று அதிகாலை ஆறரை மணிக்கு யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் புறப்பட்டன. தொடர்ந்து ஷெல் அடி அகோரமாக நடைபெற்றது. இதே சமயம் வானில் வந்த ஹெலி கண்மூடித்தனமாகச் சுட்டது. கோட்டையைச் சுற்றி நின்ற விடுதலைப் புலிப் போராளிகளும் பதிலுக்கு கோட்டையை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். யாழ்ப்பாண நகரில் வெகு தூரத்துக்குக் கோட்டையிலிருந்தும் ஹெலியிலிருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்த ரவைகள் வந்து விழுந்தன. யாழ் கோட்டைப் பகுதி துப்பாக்கி வேட்டு, ஷெல் அடிகளினால் அமர்க்களப்பட்ட

அதே சமயம் காரைநகர் கடற்படை கப்பலிலிருந்து நகருக்குப் பிரங்கித் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தது

## வவுனியாவில் கடைகளுக்குத்தீ

(வவுனியா)

வவுனியா நகருக்குள் இருந்த முகாம்களுக்குள் இருந்த சிங்கள இராணுவம் திடீரென வெளியேறி வவுனியா நகர பகுதிக்குள் புகுந்து கடைகளுக்கு தீவைத்துள்ளனர்.

இதனால் வியாபர ஸ்தாபனங்கள் பல சேதத்திற்குள்ளாகியதுடன் பெருந்தொகை ரூபா பெறுமதியான பொருட்கள் சேதமடைந்துள்ளன. (அ)

## எதிர் கட்சிகளுக்கு விளக்கம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பற்றிய தற்போதுள்ள நிலைமைகள் குறித்து எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு அரசாங்கத்தால் எடுத்துக்கூறப்பட்டது.

இது தொடர்பான விசேட கூட்டம் பிரதமர் டீ பி.விஜயதுங்கா தலைமையில் பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

## அமெரிக்கா கவலை

(வாஷிங்டன்)

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப் பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள்குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

அங்கு மேற்கொள்ளப் பட்டு வரும் மனித உரிமை மீறல் இரத்தக் களரி என்பன உடனடியாக நிறுத்தப்படுதல் அவசியம் என்று கூறியுள்ள அமெரிக்கா இந்தநோக்கத்தைஅடையும் வகையில் இரு தரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற வேண்டுமென்றும்வலியுறுத்தியுள்ளது.

ணையிடம்பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்களென அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மிக நெருக்கமான நிலையில் சண்டை நடைபெற்று வந்தது. தற்போது

விதத்தில் மூன்று நாட்களாக உணவு வசதியெதுவுமின்றி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# யுத்தக்கப்பல்மீது றொக்கட் தாக்குதல் கப்பலுக்கு பலத்த சேதம்

## விபத்தில் ஐந்துபுலிகள் பலி

(காங்கேசன் துறை)

காங்கேசன்துறைக் கடலில் நின்ற ஸ்ரீலங்கா யுத்தக்கப்பல் மீது விடுதலைப்புலிகள் றொக்கற் தாககுதல் மேற்கொண்டதனால் அக்கப்பல்பலததசேதத்திற்குள்ளாகியது.

காங்கேசன்துறையில்தரித்து நின்று கரையோரப் பகுதி நோக்கி பீரங்கித் தாக்குதல் செய்து வந்த யுத்தக் கப்பல் ஒன்றின்மீது மேற்கொண்ட ஏவுகணைத்தாக்குதலில் அந்த கடற்படைக் கப்பலின் இயந்திர அறைகம்பியூட்டர் கட்டுப்பாட்டறை ''றடார்'' சாதனம் என்பன உடைத்தெறியப் பட்டுள்ளன.

இதனால் அக்கப்பல் நகர முடியாத நிலையை அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கட்டைபறிச்சான் இராணுவ முகாம் புலிகள்வசம்: 40இராணுவம் பலி!

திருக்கோணமலை கட்டைபறிச்சான் ஸ்ரீலங்காஇராணுவ முகாம் தாக்கப்பட்டுள்ளது. தற்போது இம்முகாம் விடுதலைப்புலிகளின் கைக்குக் கிடைத்துவிட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த முகாம் தாக்கப்பட்டு தகர்த்தெறியப்பட்டதுடன் நாற்பதுக்கும் அதிகமான இராணுவத்தினர் சண்டையின் போதுகொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்த அனைத்து ஆயுதங்களும் வெடிபொருட்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இத் தாக்குதலில் ஒரு விடுதலைப்புலி வீரர் காயமடைந்துள்ளார். (அ)

# மாங்குளம் சிங்கள இராணுவ முகாம் புலிகள் வசம்

(மாங்குளம்)

மாங்குளத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் நேற்று நடைபெற்ற மோதலின் போது அம் முகாமில் இருந்த இராணுவத்தினர். பலர் கொல்லப்பட்டனர். பன்னிரண்டுவிடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர்.

இரண்டாவது நாளாக நேற்று மாங்குளத்தில் இருதரப்பினருக்குமிடையே தொடர்ந்து நடந்த மோதலின் போது விடுதலைப் புலிகள் இராணுவத்தினரின் பல காவல் அரண்களைத் தகர்த்துக் கொண்டு முகாமிற்குள் முன்னேறினர்.

தாக்குதலில் முகாமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஆறுநாள் யுத்தத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் 200க்கு மேல் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆறுநாள் யுத்தத்தில் சிறீலங்கா இராணுவம் பெரும் பின்னடைவை கண்டுள்ளதுடன் ஓர் திடீர் ஆட்பல இழப்பைக் கண்டுஉளதாகவும் தகவல் அறிந்தவட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

சுமார் இருநூற்றுக்கு மேற்பட்ட இராணுவ சிப்பாய்கள் இங்க மோதலில் உயிரிழநதுள்ளதாகவும் பலநூறு இராணுவத்தினர்காயமடைந்தும் உள்ளனர். அத்தோடு சுடுகலன்களை இராணுவத்தினர் விட்டுவிட்டு ஓடியுள்ளதாலும் தொடர்பு சாதனங்கள், மோட்டார்கள், சிறு பீரங்கிகள், வெடிமருந்துகள லட்சக் கணக்கான

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கும்புறுமுனையில் சண்டை, புனானை; 2500 இராணுவம்

கும்புறுமுனையில்சிறிலங்கா அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் தொடர்ந்து சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இதே சமயம் புனானையிலிருந்து நேற்றுக் காலை இரண்டாயிரத்து ஐந்நூறு பேர்கொண்ட சிறிலங்கா இராணுவம் மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்ததாக நேற்றுக்காலையில் கிடைத்த செய்தி தெரிவித்தது.

# முல்லைத்தீவு மாவட்ட சிற்றூரவைகள்

# நிர்வாக உறுப்பினர்களின் பட்டியல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் கிராம ரீதியாக அமைக்கப்பட்ட சிற்றூரவைகளினால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகளது பெயர்ப்பட்டியல்

**நீராவிப்பிட்டி மேற்கு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | க. பைக்கீர் தம்பி |
| 2. | செயலாளர் | எ. எல். ஹல்லாஜ் |
| 3. | பொருளாளர் | எ. சி. அன்னவர்பே |
| 4. | நிர்வாக உறுப்பினர் | சீ. நிஷார் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | க. ஆதம்பாவா |
| 6. | நிர்வாக உறுப்பினர் | எம். எஸ். மஃறூப் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | க. ஜெனாயில்சாஜின் |

**வுறிஜிராபுரம் கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | நா. மு. மாதார் |
| 2. | செயலாளர் | செ. முத்துமுகம்மது |
| 3. | பொருளாளர் | அ. பலீல் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | யு. வறக்வீஜம் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | சு. தாவறீர் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | மு. மாவறீர் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | பு. கச்சுமுகம்மது |

**தண்ணீரூற்று கிழக்கு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | என். செல்வராசா |
| 2. | செயலாளர் | ஜனாப் கனிபா |
| 3. | பொருளாளர் | ஜனாப். எம். ஐ. பளீல் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | எஸ். தட்சணாமூர்த்தி |
| 5. | நிர்வாக உறுப்பினர் | எஸ். வி. பாலசிங்கம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | திருமதி கெ. பொன்னம்பலம் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | ஜனாப். எம். எஸ். கலாம் |

**தண்ணீரூற்று மேற்கு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | க. ஜெகதீஸ்வரன் |
| 2. | செயலாளர் | மு. ஸ்ரீபத்மநாதன் |
| 3. | பொருளாளர் | சு. கோபாலகிருஷ்ணன் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | ப. முத்துலட்சுமி |
| 5. | நிர்வாக உறுப்பினர் | பூ. பொன்னம்பலம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | அ. புஸ்பராசா |
| 7. | நிர்வாக உறுப்பினர் | வி. புஸ்பராசா |

**கணுக்கேணி கிழக்கு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | பொ. வில்வலிங்கம் |
| 2. | செயலாளர் | ந. மகாதேவன் |
| 3. | பொருளாளர் | த. கனகராசா |
| 4. | நிர்வாக உறுப்பினர் | இ. விசாகலிங்கம் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | க. சங்கரப்பிள்ளை |
| 6. | நிர்வாக உறுப்பினர் | க. நாகன் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | யோ. சிவறஞ்சி |

**கணுக்கேணி மேற்கு கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | வி. பரமலிங்கம் |
| 2. | செயலாளர் | ச. நற்குணம் |
| 3. | பொருளாளர் | இ. சிவப்பிரகாசம் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | நா. தவராசா |
| 5. | நிர்வாக உறுப்பினர் | கு. விஜயானந்தம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | க. கதிர்காமு |
| 7. | நிர்வாக உறுப்பினர் | திருமதி சி மனோ மணி |

**மாமூலை கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | வே. மனோகரலிங்கம் |
| 2. | செயலாளர் | க. கிருஸ்ணன் |
| 3. | பொருளாளர் | சு. ஜெயநாயகம் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | து. சூரியகுமார் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | சி. அருளானந்தம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | க. சரஸ்வதி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | க. சௌந்திராசா |

**குமாரபுரம் முறிப்பு கி சே உ பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சு. இரத்தினசிங்கம் |
| 2. | செயலாளர் | சி. சந்திரவதனா |
| 3. | பொருளாளர் | து. பாலச்சந்திரன் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | ச. இராசரட்ணம் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | க. பாலசிங்கம் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | பொ. கிருஸ்ணமூர்த்தி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | இ. அருட்பிரகாசம் |

**(பூதன்வயல்) மதவளசிங்கன் கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | சோ. திலகசேகரம் |
| 2. | செயலாளர் | ம. சங்கரப்பிள்ளை |
| 3. | பொருளாளர் | இ. ரெங்கசாமி |
| 4. | நிர்வாக உறுப்பினர் | தி. செல்வராசா |
| 5. | நிர்வாக உறுப்பினர் | த. இராமச்சந்திரன் |
| 6. | நிர்வாக உறுப்பினர் | ஜோ. அந்தோனி |
| 7. | நிர்வாக உறுப்பினர் | திருமதி வ. அரசம்மா |

**குமுழமுனை 5 ஆம் வட்டாரம் கி. சே. உ. பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ந. குமாரசாமி |
| 2. | செயலாளர் | சு. ஞானசேகர் |
| 3. | பொருளாளர் | செ. சுப்பிரமணியம் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | க. பத்மநாதன் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | சி. உதயராணி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | இ. புலேந்திரா |
| 7. | நிர்வாக உறுப்பினர் | ம. சௌந்தரராசா |

(தொடரும்)

## மலசலகூட அவலம்

(மன்னார்)

மன்னார் நகரத்தில் கடற்கரையோர மீன்சந்தை அருகில் அமைந்துள்ள மலசலகூடம் பாவனையாளரின் சுகாதாரத்தைப் பாதிப்பதாக அமைந்துள்ளது. வாளி மலசல கூடமாக அமைந்துள்ள இது இடிபாடடைந்துள்ளது. மலசலகூட வாளிகளில் நிறையும் கழிவுகள் கடற்கரையோரம் கொட்டப்படுகின்றன. அயலில் செல்ல முடியாதபடி துர்நாற்றம் வீசுகிறது. மன்னார் பிரதேச சபையின் சுகாதாரப் பகுதி இதைக் கவனிக்குமா? (60)


ராஜா (யாழ்)
தினசரி 4·00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி, கார்த்திக் நடித்த
மௌனராகம்
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
அபூர்வ சகோதரர்கள்


வின்ஸர்(யாழ்)
தினசரி 4-00, 6-45, 9-45
விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

மனோகரா - (யாழ்)
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா
நடித்த
ராஜா சின்ன ரோஜா

கவுஸ்புல் காட்சியாக
வெற்றிநடை போடுகிறது
வெலிங்டன் (யாழ்)
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசு, லக்ஷ்மி, ரகுவரன், இளவரசி நடித்த
A.V.M. இன்
சம்சாரம் அது மின்சாரம்
(கலர்)

லிடோ (யாழ்)
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-45, 9-45
ரஜனி, அம்பிகா,
ஜெயசங்கர் சுஜாதா,
நாகேஸ் நடித்த
மாவீரன்
(புதிய பிரதி)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. நா. தெட்சணாமூர்த்தி**

**நீர்வேலி**

மலர்வு 09 . 09 . 1939 உதிர்வு 16 . 05 . 1990

சிவசங்கர பண்டிதர் மரபுதித்த
தங்கநிகர் தெட்சணா மூர்த்தியவன்
எங்கள் உயிர் நண்பன்
உடுக்கை இழந்தவன் கைபோல் பிறர்
இடுக்கண் களைவோன்
இன் முகத்தோன் இன் சொல்லோன்
தன் நலம் துறந்தோன்
பொன்னம்பலவனடி சேர்ந்தான் பொலிந்தே.

நீர்வேலி மத்தி, நீர்வேலி. நண்பர்கள்.

(R 361)

## வரிவிளம்பரம்


தேவை

மூன்று பேர் கொண்ட சிறு குடும்பத்திற்கு மாநகர சபை எல்லைக்குள் ஒரு பகுதி வீடு அல்லது முழு வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 32, பிரப்பன்குளம் றோட் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். (R-362)

வாடிக்கையாளரே ....

கிழக்கு கி. சே. உ. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | பொ. வில்வலிங்கம் |
| 2. | செயலாளர் | ந. மகாதேவன் |
| 3. | பொருளாளர் | த. கனகராசா |
| 4. | நிர்வாக உறுப்பினர் | இ. விசாகலிங்கம் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | க. சங்கரப்பிள்ளை |
| 6. | நிர்வாக உறுப்பினர் | க. நாகன் |
| 7. | நிர்வாக உறுப்பினர் | யோ. சிவறஞ்சி |

குமுழமுனை 5 ஆம் வட்டாரம் கி. சே. உ. பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | ந. குமாரசாமி |
| 2. | செயலாளர் | சு. ஞானசேகர் |
| 3. | பொருளாளர் | செ. சுப்பிரமணியம் |
| 4. | நிர்வாக உறுப்பினர் | க. பத்மநாதன் |
| 5. | நிர்வாக உறுப்பினர் | சி. உதயராணி |
| 6. | நிர்வாக உறுப்பினர் | இ புலேந்திரா |
| 7. | நிர்வாக உறுப்பினர் | ம. சௌந்தரராசா |

(தொடரும்)

இடுக்கண் களைவோன்
இன் முகத்தோன் இன் சொல்லோன்
தன் நலம் துறந்தோன்
பொன்னம்பலவனடி சேர்ந்தான் பொலிந்தே.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

நண்பர்கள்.

(R 361)

தேவை

மூன்று பேர் கொண்ட சிறு குடும்பத்திற்கு மாநகர சபை எல்லைக்குள் ஒரு பகுதி வீடு அல்லது முழு வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 32, பிரப்பன்குளம் றோட் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். (R-362)

வாடிக்கையாளரே....

உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி......

உங்களுக்குத் தேவையான

*தரமான

சுத்தமான

அரிசி வகைகள் அனைத்தும்

மொத்தமாகப் பெற்றுக்கொள்ள

எம்மை நாடுங்கள்

# ஞானேஸ்வரன் அரிசி ஆலை

இணுவில் மானிப்பாய் வீதி, இணுவில்.

(B/1179)

## இந்திய - பாகிஸ்தான் உறவு வளர -

# போர் நடவடிக்கைகளை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும்

## இந்தியா அறிவிப்பு

(புதுடில்லி)

''இந்தியாவுக்கும், பாகிஷ் தானுக்கும் இடையிலான உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமாயின் போர் நடவடிக்கைகளையும், மறைமுக தாக்குதல்களையும் பாகிஸ்தான் உடனடியாக நிறுத்திக் கொள்ளவேண்டும்'' என்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. இந்திரகுமார் குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசும்பொழுதே திரு. குஜ்ரால் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் தற்பொழுது எல்லைப் பிரதேசங்களில் நிலவிவரும் பதட்ட நிலைமைகளை தணிக்கும் வகையில் இந்தியா தெரிவித்துள்ள ஒருதலைப்பட்சமான யோசனைகளுக்கு பாகிஸ்தான் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பிரதேச ஒருமைப்பாடு குறித்து பாகிஸ்தானுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தும் சாத்தியக் கூறுகள் இல்லை என்றும் கூறிய திரு. குஜ்ரால் இந்தியா அரசியல் உறுதிப்பாட்டினை கொண்டுள்ளதுடன், தொடர்ந்து பாகிஸ்தானுடன் நட்புறவை விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

## இந்திய வெளியுறவு அமைச்சர் ஜேர்மன் பயணம்

(புதுடில்லி)

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. குஜ்ரால் மூன்று நாள் உத்தியோக பூர்வபயணமொன்றினை மேற்கொண்டு ஜேர்மன் செல்லவுள்ளார்.

அமைச்சர் குஜ்ரால் இந்த பயணத்தின் போது ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் திரு. ஜென்சருடன் விரிவான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இருதரப்பு பிராந்திய மற்றும் சர்வதேச நிலைமைகள் குறித்து இப்பேச்சுக்களின் போது ஆராயப்படும்.

ஜேர்மன் நாடுகள் ஒன்றிணைதல் உட்பட பல ஐரோப்பிய விவகாரங்கள் குறித்தும் இந்த சந்திப்பில் கருத்துக்கள் பரிமாறப்படவுள்ளதுடன்;இந்தியா தனது அண்டை நாடுகளுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ளும் வகையில் மேற்கொண்டுள்ள புதிய கொள்கைகள், நடவடிக்கைகள் பற்றியும் தெளிவு படுத்தப்படும் என்று கூறப்பட்டது.

## நச்சுப்பொருள்கள் பாதிப்பிற்கு புதிய மருத்துவச் சிகிச்சை

(மாஸ்கோ)

மனிதனின் உறுப்புக்களிலும், திசுக்களிலும் சுற்றுப்புற சூழ்நிலைகளினால் உருவாகும் நச்சுப் பொருட்களை அழிக்க சோவியத் பேராசிரியர் யூரி லெவின் புதிய முறை ஒன்றைக் கண்டு பிடித்துள்ளார்.

சுற்றுப்புற சூழ்நிலைகளால் உடலில் ஏற்படும் நச்சுப் பொருட்களின் பாதிப்பு வெளிப்பார்வைக்குத் தெரிவதில்லை உடலின் எதிர்ப்பு சக்தியைக் குறைத்து, திசுக்களை அழிக்கிறது. இந்த மாதிரி நச்சுத் தன்மைக்கு இதுவரை சிகிச்சை எதுவும் கிடைக்கவில்லை.

திசுக்கள் மற்றும் உறுப்புக்களில் தண்ணீர் ஓட்டத்தை தூண்டுவதன் மூலம் உறுப்புக்களைச் சுத்தப்படுத்துவதே இந்த முறையின் அடிப்படையாகும். செயற்கை முறையில் நீரோட்டத்தை அதிகரிப்பது நச்சுப் பொருள்களை கழுவி விடுகிறது.

திசுக்கள் மற்றும் உறுப்புக்களில் திரவ ஓட்டத்தை மருந்துகள் மற்றும் வேறு முறைகளிலும் கட்டுப்படுத்த முடியுமென்று சோதனைகளின் பொழுது தெரிய வந்துள்ளது.

## அதிபர்களுக்குச்

## இந்தியா மீதான நடவடிக்கைகளை அமெரிக்கா ஒத்திவைக்கும்

(வாஷிங்டன்)

இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை தாம் ஒத்திப்போட உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

சூப்பர் 301 என்ற அமெரிக்க வாணிப சட்டத்தின் அடிப்படையிலேயே இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை ஒத்திப்போடும் அறிவிப்பை அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த அறிவிப்பை இந்தியா வெகுவாக வரவேற்றுள்ளதுடன், தமது வர்த்தகக் கொள்கையை விரிவுப்படுத்தும் வகையில் ஏற்கனவே பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் உள்நாட்டுத் தேவைகளை அமெரிக்க அரசு உணர்வுபூர்வமாக உணர வேண்டும் என்று இந்தியா தெரிவித்துள்ளதுடன் வர்த்தக பிரச்சினைகளை இருதரப்பு வரம்புக்குள் தீர்த்துக் கொள்ளப்படுவதை தாம் விரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

காப்புவரி, வர்த்தகம் குறித்த பொது ஒப்பந்தத்திற்காக தற்பொழுது உருகுவேயில் இரு தரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இந்தப் பேச்சுவார்த்தைகள் முடியும் வரையிலேயே இந்தியாவுக்கு எதிரான இந்த ஒத்திவைப்பு நடவடிக்கை என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பயிற்சி அளிக்கப்படுகிறது

தீவுப்பகுதி சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவில் உறுப்பினர்களாக இருக்கும் புங்குடுதீவு ஸ்ரீ சுப்ரமணிய மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த சுமார் முப்பத்தொரு மாணவிகளுக்கு தினமும் இவ் வித்தியாலயத்தில்முதலுதவிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் பதினைந்தாம் திகதி முதல் நடைபெற்று வரும் இப் பயிற்சி வகுப்பை வித்தியாலய ஆசிரியை செல்வி சி.ரஞ்சினி அவர்கள் நடாத்தி வருகின்றார்.

கீழ்ப் பிரிவைச் சேர்ந்தஇம் மாணவிகளுக்கு வித்தியாலயத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வரும் அதே வேளை மேற்பிரிவைச் சேர்ந்த பத்து மாணவிகளுக்கு புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சி வகுப்பில்பயிற்சி பெறும் மாணவிகளுக்கு ஒரு மாதகால பயிற்சி அளிக்கப்படும் என்றும் தொடர்ந்தும் புங்குடுதீவில் உள்ள ஏனைய பாடசாலைகளில் கல்விபயிலும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவில் அங்கம் வகிக்கும் மாணவ மாணவியருக்கும் இதே போன்ற பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (22)

## நெடுந்தீவில் புதிய குரவர்

(நெடுந்தீவு)

நெடுந்தீவைச் சேர்ந்த அருட் சகோதரர் மனுவல் சவரிமுத்து இம்மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை நீர்கொழும்பு கொச்சிக்கடை செபமாலை இராக்கினி இல்ல ஆலயத்தில் கொழும்பு துணை ஆயர்பேரருட்திரு ஒஸ்வல்ட்

## நிரந்தர

# A L பௌதிக இரசாயனம்

# வெப்ப இரசாயனம்

## தொடர் - 4

### சத்தீஸ்

### நியமத்தகன வெப்பம் ($\Delta H°c$)


நியம நிபந்தனையில் ஒரு மூல் பதார்த்தத்தை மிகையான ஒட்சிசனில் முற்றாக எரிக்கும்போது ஏற்படும் வெப்ப உள்ளுறை மாற்றம் நியமத்தகன வெப்பம் எனப்படும்.

### சில தகனவெப்பத் தாக்கங்களும் அவற்றின் வெப்ப உள்ளுறை வரைபுகளும்

(1) பென்சிற் கரியின் தகனம்

$$C(gr) + O_2(g) \rightarrow CO_2(g) \quad \Delta H_C = -394 \text{ KJ mol}^{-1}$$

வெப்ப உள்ளுறை வரைபு




இத்தாக்கத்தில் பென்சிற் கரியின் தகன வெப்பம் ($\Delta H_C$) $CO_2$ இன் தோன்றல் வெப்பத்துக்கு சமனாகும்.

$$\Delta H_C = \Delta H_f = -394 \text{ KJ mol}^{-1}$$

உதாரணம் 4

பென்சிற்கரி, வைரம் என்பவற்றின் தகனவெப்ப உள்ளுறைகள் முறையே $-394$, $-395{\cdot}5$ KJ mol−1 ஆகும்

(a) வெப்ப உள்ளுறை வரைபு ஒன்றைப் பயன்படுத்தி $C(gr) \rightarrow C$ (வைரம்) என்னும் தாக்கத்தின் வெப்ப மாற்றத்தைக் கணிக்க.

(b) இவ்விரு புற திருப்பங்களிலும் உறுதியானது எது?

(c) $CO_2$ வாயுவின் தோன்றல் வெப்பம் என்ன?

(d) பென்சிற் கரியை வைரமாக மாற்றுவதற்குரிய வெப்பமாற்றம் மிகவும் குறைவாக இருந்த போதிலும் இம்மாற்றத்தை நிகழ்த்துவது செய்முறையளவில் இதுவரை ஏன் பயனளிக்கவில்லை என விளக்குக. (இத்தாக்கத்தின் சக்திப்பாதை வரைபு ஒன்றைப் பயன்படுத்துக)

விடை

(a) $+1{\cdot}5$KJ (b) பென்சிற்கரி (c) $-394$ KJmol$^{-1}$

(d) இம்மாற்றத்திற்கான ஏவற்சக்தி அதிகம்.

(2) ஐதரசனின் தகனம்

$$H_2(g) + 1/2\, O_2(g) \rightarrow H_2O(g) \quad \Delta H_{C_1} = -242 \text{ KJmol}^{-1}$$

$$H_2(g) + 1/2\, O_2(g) \rightarrow H_2O(l) \quad \Delta H_C = -286 \text{ KJmol}^{-1}$$

லும், திசுக்களிலும் சுற்றுப் புற சூழ்நிலைகளினால் உருவாகும் நச்சுப் பொருட்களை அழிக்க சோவியத் பேராசிரியர் யூரி லெவின் புதிய முறை ஒன்றைக் கண்டு பிடித்துள்ளார்.

சுற்றுப்புற சூழ்நிலைகளால் உடலில் ஏற்படும் நச்சுப் பொருட்களின் பாதிப்பு வெளிப்பார்வைக்குத் தெரிவதில்லை உடலின் எதிர்ப்பு சக்தியைக் குறைத்து, திசுக்களை அழிக்கிறது. இந்த மாதிரி நச்சுத்

களில் தண்ணீர் ஓட்டத்தை தூண்டுவதன் மூலம் உறுப்புக்களைச் சுத்தப்படுத்துவதே இந்த முறையின் அடிப்படையாகும். செயற்கை முறையில் நீரோட்டத்தை அதிகரிப்பது நச்சுப் பொருள்களை கழுவி விடுகிறது.

திசுக்கள் மற்றும் உறுப்புக்களில் திரவ ஓட்டத்தை மருந்துகள் மற்றும் வேறு முறைகளிலும் கட்டுப்படுத்த முடியுமென்று சோதனைகளின் பொழுது தெரிய வந்துள்ளது.

# அதிபர்களுக்குச் சம்பள உயர்வு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா அதிபர்கள் சேவையில் உள்ள I, II, III ஆம் தர அதிபர்களுக்கு 01 - 01 - 1988 இலிருந்து செல்லுபடியாகும் தன்மையில் பகிரங்க நிர்வாக சுற்று நிருபம் 387க்கு அமையச் சம்பள உயர்வு வழங்கும்படி மந்திரி சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன்பிரகாரம் மேற்படி தரங்களில் உள்ள அதிபர்களுக்குப் பின்வருமாறு சம்பளத்திட்டத்தை மாற்றியமைக்குமாறு கல்வி, உயர்கல்வி அமைச்சு மாகாண மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்குப் பணித்துள்ளது.

தரம் I - ரூபா 33,000 - 6 X 900 - 3 X 1200 – 42, 000/-

தரம் II ரூபா 31, 200 - 8 X 900 - 1 X 1200 - 39, 600/-

தரம் III – ரூபா 27,000 - 4 X 600 - 9 X 900 - 37, 500/-

# முல்லைத்தீவில் பஸ்களுக்கு எரிபொருள் இல்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இ. போக்குவரத்துச் சபை பஸ்களுக்கு கடந்த ஜூன் 13ஆம் திகதியிலிருந்து எரிபொருள் நிரப்ப முடியாமலும். திருத்த வேலைகள் மேற்கொள்ள முடியாமலும் உள்ளன.

முல்லைத்தீவு பஸ் டிப்போ இராணுவ முகாமுக்கு முன்னால் அமைந்துள்ளதால் அங்கு திருத்த வேலைகள் செய்யவும், டீசல் நிரப்பவும் அனுமதி மறுக்கப்பட்டதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாம் முல்லைத்தீவுச் சாலை தமது பஸ்களுக்குத் தற்சமயம் தனியார்துறையில் தற்காலிகமாக டீசல் பெறுவதால் குறைந்தளவிலான உள்ளூர்ச் சேவையை மட்டும் நடத்துகிறது. நாளடைவில் இச் சேவையைக்கூட இடைநிறுத்தம் செய்யவேண்டிய கட்டாய நிலைக்கு முல்லைத் தீவுச்சாலை தள்ளப்பட்டுள்ளது. (58)

# வீரவேங்கை தாமு இரத்தினம் நினைவு விளையாட்டு விழா

(அச்சுவேலி)

வீரமரணமடைந்த தாமு (இரத்தினம்) வின் இரண்டாவது நினைவு தினத்தன்று புத்தூர் கிழக்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடாத்திய தாமு இரத்தினம் நினைவு விளையாட்டு விழாவில் பரிசு பெற்ற விளையாட்டு வீரர்கள் விபரம் வருமாறு;

ஆண்களுக்கான 50 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி வி. கயிலைநாதன் அளவெட்டி முதலாம் இடம், ஏ. துரைமணி நாவாந்துறை இரண்டாம் இடம், என். துரைசிங்கம் புத்தூர் கிழக்கு மூன்றாம் இடம்.

ஆண்களுக்கான 15மைல் மருதன் ஓட்டம் கே. சண்முகம் பிள்ளை வேலணை முதலாம் இடம் கே. உதயகுமார் புன்னாலைக்கட்டுவன் இரண்டாம் இடம், வி. சிவநேசன் இயக்கச்சி மூன்றாம் இடம்.

பெண்களுக்கான 15 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி செல்விரீ. சுஜீத்தா பண்டத்தரிப்பு முதலாம் இடம், செல்வி எம். தனவதி நீர்வேலி இரண்டாம் இடம், செல்வி என். றஞ்சினி நவக்கிரி மூன்றாம் இடம்.

40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான 7மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி திரு. எம். சின்னத்தம்பி அளவெட்டி முதலாம் இடம் எம். கணேசலிங்கம் சரசாலை இரண்டாம் இடம், எம். பரமநாதன் புத்தூர் மூன்றாம் இடம்

25மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி, பி. பார்த்தீபன், நவக்கிரி முதலாம் இடம். வி. சந்திரன் நவக்கிரி இரண்டாம் இடம், கே. மோகன் புத்தூர் மேற்கு மூன்றாம் இடம்

உதைபந்தாட்டப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் புத்தூர் கிழக்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் ஸ்கைறோப் விளையாட்டுக்கழகமும் கலந்துகொண்டன. ஆட்ட இறுதி வரை இரண்டுகழகமும் கோல்கள் எதுவும் அடிக்காத நிலையில் வெற்றிதோல்வி இன்றி முடிவடைந்தது.

வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசுகளை வீரவேங்கை தாமுவின் தந்தையார் சகோதரி கப்டன் றவாசின் தாய் ஆகியோர் வழங்கினர். (16)

பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் பதினைந்தாம் திகதி முதல் நடைபெற்று வரும் இப் பயிற்சி வகுப்பை வித்தியா மாணவிகளுக்கு புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சி வகுப்பில்பயிற்சி பெறும் மாணவிகளுக்கு ஒரு மாதகால பயிற்சி அளிக்கப்படும் என்றும் தொடர்ந்தும் புங்குடுதீவில் உள்ள ஏனைய பாடசாலைகளில் கல்விபயிலும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவில் அங்கம் வகிக்கும் மாணவ மாணவியருக்கும் இதே போன்ற பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (22)

# நெடுந்தீவில் புதிய குரவர்

(நெடுந்தீவு)

நெடுந்தீவைச் சேர்ந்த அருட் சகோதரர் மனுவல் சவரிமுத்து இம்மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை நீர்கொழும்பு கொச்சிக்கடை செபமாலை இராக்கினி இல்ல ஆலயத்தில் கொழும்பு துணை ஆயர்பேரருட்திரு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகையால் புதிய குருவாக திருநிலைப் படுத்தப்படுவார்.

ஜூலை மாதம் 9 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நெடுந்தீவு புனித மரியன்னை தேவாலயத்தில் முதல் பலியை ஒப்புக் கொடுப்பார்.

# நிரந்தர கட்டடம்

(ஏறாவூர்)

ஏறாவூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நிரந்தர கட்டடம் ஒன்று நிறுவப் படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

சமூக சேவையாளர் ஜனாப் யூ. பி. நூர்முகமது இதற்கான அடிக்கல்லை நாட்டினார்.

# மெய்வல்லுநர் போட்டி

யாழ் மாநகர சன சமூக நிலைய சமாசம் தனது அங்கத்துவ நிலையங்களுக்கு இடையிலான வலைபந்தாட்டம், கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், எறிபந்தாட்டம் தாச்சி, மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளையும் நடாத்தவுள்ளது.

இதற்கான விபரங்களை சிவன் பண்ணை வீதியிலுள்ள சம்மேளன அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு விளையாட்டு குழுத்தலைவர் திரு. எஸ். ரி. கணநாதன் அறிவித்துள்ளார்.

# சோடா சாராயம் விலைகள் வர்த்தகர் சங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வர்த்தகர் சங்கச் செயலாளர் க. வி. குணரெத்தினம் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையொன்றின் பிரகாரம் சோடா, சாராயம், சிகறெட் ஆகியவற்றின் மொத்த விற்பனை விலை வருமாறு:

| இனம் | வரி | வரி உட்பட மொ. வி |
|---|---|---|
| 1. சாராயம் (பனை) | 15.00 | 93 00 |
| 2. மெண்டிஸ் (ஸ்பெஷல்) | 15.00 | 129.50 |
| 3. கோல்ட் லேபல் | 15.00 | 115.00 |
| 4. ஹெட் லேபல் | 15 00 | 95.00 |
| 5. வெட் 88 | 15.00 | 106 00 |
| 6. பிறண்டி M. S. | 15.00 | 210.00 |
| 7. ஜின் | 15.00 | 170.00 |
| சோடா யானை | | |
| பிளேன் | 50 | 6.00 |
| இனிப்பு | 50 | 4.50 |
| பெப்சிமிரிண்டர் | 50 | 5.50 |
| சிகரெட் | | |
| 1. பிறிஸ்டல் | 10 | 1.70 |

(b) இவ்விரு புற திருப்பங்களிலும் உறுதியானது எது?

(c) $CO_2$ வாயுவின் தோன்றல் வெப்பம் என்ன?

(d) பென்சிற் கரியை வைரமாக மாற்றுவதற்குரிய வெப்பமாற்றம் மிகவும் குறைவாக இருந்த போதிலும் இம்மாற்றத்தை நிகழ்த்துவது செய்முறையளவில் இதுவரை ஏன் பயனளிக்கவில்லை என விளக்குக. (இத்தாக்கத்தின் சக்திப்பாதை வரைபு ஒன்றைப் பயன்படுத்துக)

விடை

(a) + 1·5KJ (b) பென்சிற்கரி (c) − 394 $KJmol^{-1}$


(d) இம்மாற்றத்திற்கான ஏவற்சக்தி அதிகம்.

**(2) ஐதரசனின் தகனம்**

$$H_2(g) + 1/2\, O_2(g) \rightarrow H_2O(g) \quad \Delta H_{C_1} = -242\ KJmol^{-1}$$

$$H_2(g) + 1/2\, O_2(g) \rightarrow H_2O(l) \quad \Delta H_{C_2} = -286\ KJmol^{-1}$$

வெப்ப உள்ளுறை வரைபு




ஐதரசனுக்கு அல்லது ஐதரசனைக் கொண்ட எரிபொருட்களுக்கு இரு தகன வெப்பங்கள் உண்டு.

$\Delta Hc_1$ — ஐதரசனின் தாழ்ந்த தகனவெப்பம்

$\Delta Hc_2$ — ஐதரசனின் உயர் தகனவெப்பம்

இங்கு தகனத்தின் போது விளையும் நீராவி ஒடுங்கித் திரவ நீராக மாற்றப்படும் இதனால் பெறப்படும் வெப்பம் $\Delta H$ என்க.

$$H_2O(g) \rightarrow H_2O(l) \ \ldots\ldots\ \Delta H = ?$$

∴ நீராவி ஒடுங்கும்போது ஏற்படும் வெப்ப உள்ளுறை மாற்றம்

$$\Delta H = \Delta H_{C_2} - \Delta H_{C_1}$$

$$= -286 - (-242) = -44\ KJ\ mol^{-1}$$

குறிப்பு

$H_2$ இன் தகன வெப்பம் = $H_2O(l)$ இன் தோன்றல் வெப்பம்

= 286 $KJ\ mol^{-1}$

**உதாரணம் 5**

$$2H_2(g) + O_2(g) \rightarrow 2H_2O(l) \quad \Delta H^\circ_{298} = -572\ KJ$$

(1) இத்தாக்கத்தில் தாக்கி, விளைவு என்பவற்றில் எது கூடிய வெப்ப உள்ளுறையைக் கொண்டிருக்கும்.

(2) $2H_2O(g) \rightarrow 2H_2(g) + O_2(g)$ என்னும் தாக்கத்தின் $\Delta H^\circ_{298}$ ஐக் கணிக்க.


(3) திரவ நீரின் தோன்றல் வெப்பம், $H_2$ இன் தகனவெப்பம் என்பவற்றைக் கணிக்க.

(4) $H_2O(l) \rightarrow H_2O(g)$ $\Delta H^\circ_{298} = +44KJ$ ஆயின் $2H_2(g) + O_2(g) \rightarrow 2H_2O(g)$ என்னும் தாக்கத்தின் $\Delta H^\circ_{298}$ ஐக் கணிக்க.

விடை

(1) தாக்கி (2) +572 KJ (3) $\Delta H_f[H_2O(l)] = \Delta H_C[H_2(g)] = -\frac{572}{2} = -286\ KJmol^{-1}$

(4) $2H_2(g) + O_2(g) \xrightarrow[\Delta H_1]{-572} 2H_2O(l)$




$$\Delta H = \Delta H_1 + \Delta H_2$$

$$\Delta H = -572 + 44 \times 2$$

$$\Delta H = -484\ KJ$$

## புன்னாலைக்கட்டுவனில் ஹெலி தாக்குதல்

(வசாவிளான்)

நேற்று முன்தினம் மாலை ஏழுமணியளவில் தெற்கு புன்னாலைக் கட்டுவனில் ஒரு ஹெலிகப்டர் விமானம் சுற்றிப்பறந்து தாக்குதலை நடத்தியது.

இத்தாக்குதலின் போது ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதோடு ஹெலியிலிருந்து மக்கள் வாழும் குடியிருப்புகளை நோக்கி கிரனைட்டுகளும் வீசப்பட்டன.

இத்தகைய கிரனைட் தாக்குதலின் போது இளைப்பாறிய புகையிரத இலாகா ஊழியரான வன்னித்தம்பி என்பவர் காயமடைந்தார். ஏராளமான மரங்கள் முறிந்து வீழ்ந்தன. பல கால்நடைகளும் காய முற்றதோடு பல கோழிகளும் இறந்து கிடக்கக்காணப்பட்டன.

## மடுக்கோயில் திருவிழா

பிரசித்தி பெற்ற மடுமாதா ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 23-6-90 தொடக்கம் 2-07-90 வரை இடம் பெறுகிறது.

கடந்த காலங்களை விடப் பெருந்தொகையான மக்கள் இம் முறை கூடுவார்கள் என எதிர்பார்க்கப் படுவதால் அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மன்னார் கச்சேரியும், அடம்பன் பிரதேச சபையும் இணைந்து மேற்கொண்டுள்ளன. (60)

## கூட்டம்

தீவுப்பகுதி சிகைஅலங்கரிப்பாளர் சங்கத்தின் கூட்டம் ஒன்று இம்மாதம் எட்டாம் திகதி வெள்ளிக் கிழமை மாலை புங்குடுதீவு பெருங்காட்டுப்பகுதியில் தலைவர் வி.சுரேஸ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் குடிமைத் தொழில் முறையை முற்றாக நிறுத்துவதற்கு உறுப்பினர்கள் அனைவரும் தமது பூரண ஒத்துழைப்பை தருவதாக வாக்குறுதி அளித்துள்ளனர்.

அத்துடன் இந்நடவடிக்கையை தீவகத்தின் சகல பகுதிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டது. (22)

## ஆசிரியர் இடமாற்றம் - 1990

(யாழ்ப்பாணம்)

வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளரின் பணிப்புரையின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 63 ஆசிரியர்கள் ஜூன் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் செயற்படும்படியாக யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். மாற்றலாகி யாழ்ப்பாணத்திற்கு வந்தவர்களில் 40 பேர் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், 21 பேர் பட்டதாரிகள், 2பேர் தராதரமற்ற ஆசிரியர்கள்.

## ஈழநாதம் செய்திக்கு பலன்

(மன்னார்)

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொறுப்பிலான நாச்சிக்குடா எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் கட்டுப்பாட்டு விலையில் சங்கத்தின் பொறுப்பில் விற்பனை செய்யப்படுகிறது. கொள்கலன்களில் அடைக்கப்பட்டு சங்கத்துக்குரிய லாறி மூலம் பெற்றோல் மேற்படி நிலையத்துக்கு அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிலையத்தில் பெற்றோல் கட்டுப்பாட்டு விலையில் விற்கப்படாமையும் தனியார் ஆதிக்கமும் கடந்த வாரம் ஈழநாதம் பத்திரிகையில் முதற்பக்கச் செய்தியாக வெளிவந்ததும் அதை இலங்கை வானொலி தனது செய்தித்தாள் கண்ணோட்டம் நிகழ்ச்சியில் எடுத்துக் காட்டியதும் தெரிந்ததே. (60)


வெளிநாட்டில் உங்கள் உறவினர்களுக்கு

அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக

கடிதங்கள், பார்சல்கள், தஸ்தாவேஜுக்கள்

ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்பு கொள்ளுங்கள்

DHL WORLDWIDE EXPRESS

**D. H. L. International Ltd.**

C/o. **Cosmos Marketing Services**

331, Kasthuriyar Road, Jaffna.

(B 965)



வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க



வெளிவந்துவிட்டது

**எயிட்ஸ்**

(இரண்டாம் பதிப்பு)

டொக்டர்

எம். கே. முருகானந்தன் எழுதியது

- இருதய நோய் பற்றிய பூரண தகவல்கள்
- நோய் தொற்றாது தடுக்கும் முறைகள்
- சுகாதார சேவையாளருக்கான விசேட குறிப்பு
- விஞ்ஞான மாணவர்களுக்கான பிற்சேர்க்கை - HIV வைரசின் உயிரியல் பற்றியது

விலை ரூபா. 15/-

பிரபல புத்தக சாலைகளில் கிடைக்கும்

விபரங்களுக்கு

திருமதி ம. முருகானந்தன்

ஆங்கில வைத்தியசாலை

பருத்தித்துறை.

(B/1175)



தரமிக்க உருக்கிலான தளபாடங்களுக்கு

நாட வேண்டிய ஸ்தாபனம்

"ஜனார்த்தன்ஸ்" இணுவில்

தரமான உறுதிமிக்க நீடிய பாவனைக்குகந்த உருக்கினாலான

அலுமாரிகள், மேசைகள், கதிரைகள், தட்டச்சு மேசைகள்

மற்றும்

காரியாலய வீட்டுத் தளபாடங்கள் அத்தனையும்

அதி நவீன டிசைன்களில் என்றும் பெற்றுக் கொள்ள

தாமதமின்றி நாடுங்கள்.



**ஜனார்த்தன்ஸ் இன்டஸ்ரீஸ்**

காங்கேசன்துறை வீதி,

இணுவில்.

(B/1011)



தரம்வாய்ந்த நவீன டிசைன்களிலான

மரத்தளபாடங்களின்

புதுப்புது டிசைன்களில்

கடைச்சல் வேலைகளனைத்தும்

பிறசோக்கை - HIV வைரசின் உயிரியல் பற்றியது

விலை ரூபா. 15/-

பிரபல புத்தக சாலைகளில் கிடைக்கும்


விபரங்களுக்கு
திருமதி ம. முருகானந்தன்
ஆங்கில வைத்தியசாலை
பருத்தித்துறை.

(B/1175)

அதி நவீன டிசைன்களில் என்றும் பெற்றுக் கொள்ள தாமதமின்றி நாடுங்கள்.

**ஜனார்த்தனஸ் இன்டஸ்ரீஸ்**
**காங்கேசன்துறை வீதி,**
**இணுவில்.**

(B/1011)



❃ தரம்வாய்ந்த நவீன டிசைன்களிலான
**மரத்தளபாடங்களின்**
**மொத்த விற்பனையாளர்கள்**

❃ புதுப்புது டிசைன்களில்
**கடைச்சல் வேலைகளனைத்தும்**
செய்து கொடுப்பவர்கள்

❃ எல்லாவித மரவகைகளும்
**அரிவு வேலைகள்**
**செய்து கொடுப்பவர்கள்**
கோண்டாவிலில் நம்பிக்கைக்குரிய இடம்

# கணேசன் அரிவு ஆலை

**கே. கே. எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**

(B/1176)

## சிந்தனைக்கு

அதிர்ஷ்டம் வீரர்களை வணங்குகின்றது.
கோழைகளை வீழ்த்துகின்றது.

- ஸெனெசு

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 17-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# சபாநாயகர் இப்படிச் சொல்லலாமா?

"மொட்டந்தலைக்கும் முழந்தாளுக்கும் முடிச்சுப் போடுவது" என்பது பெரும்கலை. இது எப்பொழுதும் சுலபமாக செய்துவிடமுடியாது.

இந்த முயற்சியில் இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் எம். எச். முகம்மது இறங்கியிருக்கிறார்.

"வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப்புலிகளுக்கு இஸ்ரேலியர்கள் பயிற்சியளிக்கிறார்கள்".

சபாநாயகர் எம். எச். முகம்மதுவின் புதிய கண்டுபிடிப்பு இது. பத்திரிகையாளர் மாநாடு கூட்டி சபாநாயகர் முகம்மது தனது புதிய கண்டுபிடிப்பை வெளியிட்டிருக்கிறார்.

சபாநாயகர் முகம்மது கடைசியாக எப்போது வடக்கு மாகாணத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் வந்துசென்றாரோ தெரியாது. அவருக்கே இது நினைவிருக்காது.

ஜே. ஆர். அரசின் போக்குவரத்து அமைச்சராக ஜனாப் எம். எச். முகம்மது இருந்தபோதுதான் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு இலங்கைக்கு வந்தது.

இலங்கை இராணுவத்துக்கு இஸ்ரேலிய மொஸாட் பயிற்சியளித்தது ஜனாப் எம். எச். முகம்மதுக்கு நன்கு தெரியும்.

இஸ்ரேலிய மொஸாட் பாணியில் இலங்கை அரசபடைகள் வடக்கிலும் கிழக்கிலும் ஷெல் அடியும் குண்டுவீச்சும், ஹெலித்தாக்குதலும் நடத்தியதையும். கிழக்கில் மட்டுமல்ல வடக்கிலும் கூட அப்பாவித் தமிழ் இஸ்லாமிய மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டதும் ஜனாப் எம். எச். முகம்மதுக்கு நன்கு தெரியும்.

இப்பொழுதும் கூட அதே மொஸாட் பாணியில் வடக்கிலும் கிழக்கிலும் ஷெல்அடியும் ஹெலித்தாக்குலும் குண்டுவீச்சும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஜனாப் முகம்மது அமைச்சராக இருந்த சமயத்தில் பாகிஸ்தானின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு பாகிஸ்தானுக்கு அடிக்கடி சென்றுவந்தார். சிறிது உதவியும் பெற்றுவந்தார். ஆனால் இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவை இங்கிருந்து அமைச்சர்

# மன்னார் மாவட்டம் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினைகள்

பின்தங்கிய ஒரு மாவட்டமென கணிக்கப்படுவது மன்னார் மாவட்டம். கல்வித் துறையில் அது மேலும் பின்தங்கக் கூடிய அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

இம் மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை இல்லாத எந்த ஒரு பாடசாலையும் இல்லை. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் என்னும் பாடங்கள் மாத்திரமல்ல - உயர்தர, ஆரம்ப வகுப்புகளுக்கு அன்னை மொழி போதிக்கவே இங்கு ஆசிரியர்கள் குறைவு.

அன்னை மொழியைக் கூட பிழையற எழுதவோ வாசிக்கவோ முடியாது திகைக்குமளவுக்கு பெரும்பாலான உயர்தர வகுப்பு மாணவர்களே உள்ளார்கள். அடிப்படை எழுத்தறிவு கூடப் பெரும்பாலான பாடசாலைகளில் பின்தங்கி இருப்பதை வேதனையுடன் குறிப்பிட வேண்டி உள்ளது.

ஆரம்ப பிரிவுகளுக்கான கற்பித்தலுக்கு பயிற்றப் பட்ட ஆசிரியர்கள் பல பாடசாலைகளில் இல்லை. நெருக்கடியை நீக்க டயிலுநர் ஆசிரியர்களான இளைஞர்கள் இன்று பல பாடசாலைகளுக்கு அனுப்பப் பட்டிருந்தாலும் கூட, பாலர் பிரிவுகளில் கற்பிக்கக் கூடிய நிலையில் அவர்கள் இல்லை.

கனிஷ்ட பிரிவுகளுக்கான ஒன்றிணைந்த கற்பித்தல் முறையை இங்கு பெரும்பாலான பாடசாலைகளில் காண முடியாதுள்ளது. அதற்கான பழியை ஆசிரியர்களில் போட முடியாது. காரணம், அவர்கள் அத்தகைய பயிற்சி நெறி இல்லாமலே அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

பாடங்களுக்கு ஆசிரியர் இல்லை. க. பொ. த(சா. த, உ. த) வகுப்புக்கள் நடைபெறும் பாடசாலைகளிற்கூட பெரும்பாலான பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. பெற்றோர்கள் நம்பிக்கை இழந்த நிலையில் தம் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தைக்கேள்விக் குறியோடு நோக்குகிறார்கள். வசதி படைத்தவர்கள் தம் பிள்ளைகளை யாழ், கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு இடமாற்றுவது சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது.

இப் பிரதேசத்தின் கல்விப் பணிப்பாளர்களாகக் கடமை புரிந்த கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய பற்றாக்குறையை ஈடு செய்ய எடுத்த நடவடிக்கைகளெல்லாம் மத்திய கல்வி அமைச்சின் அசமந்தப் போக்கால் பயனற்றுப் போயின.

யாழ்ப்பாணம் போன்ற பல தமிழ் மாவட்டங்களில், வெளி மாவட்ட சேவையை முடிக்காத, ஒரே பாடசாலையில் 10 வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் ஏராளம் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். திட்டமிடப்பட்ட ஒரு இடமாற்ற முறையை அமுல் படுத்தி இவ் இடர்ப்பாட்டை மத்திய கல்வி அமைச்சு நிவர்த்தி செய்ய வேண்டும். அது தன்னால் இயலாத பட்சத்தில் வட கிழக்கு மாகாண அமைச்சின் பொறுப்பிலாவது வட மாநில மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்.

இலுப்பைக்கடவை த. நாகேஸ்வரன்

கல்வித் துறையில் மட்டுமன்றி, விளையாட்டுத் துறையிற் கூட உடற்பயிற்சி ஆசிரியர்களோ, உப கரணங்களோ அற்ற ஒரு அநாதை நிலைக்கு இம் மாவட்டம் பின்தள்ளப் பட்டுள்ளது.

மன்னார் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் இவற்றுக்கான பழியைச் சுமத்திவிட முடியாது. ஏனெனில் நாடளாவிய ஆசிரிய இடமாற்றங்களை அமுல்படுத்தும் பொறுப்பு அவர்களிடம் இல்லை. அனுப்பப்படும் ஆசிரியர்களை பங்கிடுவது மட்டுமே அவர்களுக்குரியது.

## ஏன் இந்த அலட்சியம்

ஆசிரியர்
ஈழநாதம்

ஐயா

1988ஆம் ஆண்டு போராட்டத்தில் மரணத்தை தழுவிக் கொண்ட ஒரு பெண்ணின் இறப்பைப் பதிவு செய்ய பிறப்புச் சான்றிதழ் தேவைப்பட்டதால் யாழ்/கச்சேரியில் பிறப்புப் கொப்பி எடுப்பதற்கான விண்ணப்பம்

மக்கள் மடல்

2-5-90 இல் செய்த போது 31-05-90 கைக்கு வரும் என உயர் அதிகாரி தெரிவித்தார். 11-06-90வரைபிறப்புப் பத்திரம் வராததால்நேரில்சென்று விசாரித்த போது பிறப்புப் பத்திரம் சம்பந்தமாக நான் கொடுத்தவிண்ணப்பம் கவுண்டரில் காண வில்லை எனவும் அது கிடைத்தால் அனுப்புவதாகவும் ஓர் அதிகாரி பொறுப்பற்ற பதில் சொன்னார். அதே வேளை ஊழியர்கள் அரட்டை அடித்து சிரித்து விளையாடுகிறார்கள். கால் கடுக்க எத்தனையோ மக்கள் கலங்கி நிற்கிறார்கள். மரணமானவர் போராட்டத்தில் இறந்தவர்என்றுகூட உரியநேரத்தில்உதவி புரியமறுக்கிறார்கள். வன்செயல்களில் மரணமானவர்களின் இழப்புக்கள் பதிவு செய்து நஷ்ட ஈடு பெற எத்தனையோ குடும்பங்கள் காத்திருக்க இவர்களின் அசட்டையால் எல்லாமே பூச்சியமாகிவிடும்போல் தெரிகிறது. கவுண்டரில்கொடுத்து காணாமல் போன விண்ணப்ப இல A15412. 2/5/90 இது போன்ற தவறுகள் இனியும் தொடர சம்பந்தப்பட்டவர்கள் இடமளிக்ககூடாது.

எஸ். ஆனந்தன்

## பரந்தனில் பரீட்சார்த்த உற்பத்தி

(கொழும்பு)

பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை உற்பத்தி விரைவில் ஆரம்பமாகும்.

பரீட்சார்த்த அடிப்படையில் தற்போது உற்பத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட 40 குளோறின் காஸ் சிலிண்டர்கள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ். செல்லச்சாமியிடம் நேற்று மாலை ரன்முத்து கலகளஞ்சியச் சாலையில் வைத்து ஒப்படைக்கப்பட்டது

## சமய பாடப் பரீட்சை

(கொழும்புத்துறை)

கொச்குவில் ஞானபண்டித வித்தியாலையத்தில் கோட்டயம் பதி சிவசுப்பிரமணிய இளைஞர் மன்றத்தால் சமய பாடப் பரீட்சை நடாத்தப் பட்டது. மன்றத்தலைவர்

## மீண்டும் மரூன் வெற்றி

உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தில் கமரூன் அணி றொமானியாவை 2-1 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளது. முன்னதாக உலகச் சம்பியன் ஆர்ஜென்டீனாவை கமரூன் தோற்கடித்தது தெரிந்ததே. தற்போது அடுத்த சுற்று வட்டத்துக்கு கமரூன் தகுதி பெற்றுவிட்டது. இன்னொரு ஆட்டத்தில் யூகோஸ்லாவியா கொலம்பிய அணியை 1 0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளது. 'ஏ' பிரிவு ஆட்டமொன்றில் 3 முறை உலகச் சம்பியன்களான இத்தாலி 1-0 என்ற வித்தியாச தில் ஐக்கிய அமெரிக்காவைத் தோற்கடித்துள்ளது.

இன்றைய ஆட்டங்கள்:

'சி' பிரிவு - பிரேசில் - கோஸ்டாரிக்கா 'எப்' பிரிவு இங்கிலாந்து - ஒல்லாந்து.

## யானை தாக்கி மரணம்

## முல்லை

## ஊர்சுற்றி எழுதுவது

அருமைக்காதலிக்கு அன்புக்காதலன் அனுப்பிய அழகான பிறந்த நாள் வாழ்த்து மடல். யாழ். கோட்டைக்குள் இருந்து நேற்று அதிகாலையில் சிறிலங்கா இராணுவம் அடித்த ஷெல் கால்பகுதியை சுக்கலாக்கி விட்டது. ஆனால் காதலியின் பெயரும் காதலனின் பெயரும் அழியாமலிருக்கிறது.

பாவம் சங்கர் அவன் அன்புடன் அனுப்பிய பிறந்த நாள் வாழ்த்து மடல் கிழிந்து சிதைந்த நிலையில் இப்போது என் கையிலிருக்கிறது.

நேற்று அதிகாலை ஆறரை மணிக்கு கோட்டைக்குள்ளிருந்து ஷெல் அடியும் துப்பாக்கிச் சூடும் இதே சமயம் வானில் ஹெலி வந்து படபட வென விடாமல் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதும் யாழ். நகரை கலக்கி விட்டது. இதே நேரம் காரைநகர் கடற்படை பீரங்கித் தாக்குதல் மேற்கொண்ட சத்தமும் யாழ்.நகரில் படுக்கையிலிருந்தவர்களைத் துடித்தெழச் செய்திருக்கும்!

கோட்டைக்குள்ளிருந்து கண்மூடித்தனமாக அடித்த ஷெல்லொன்று யாழ். பெரிய கடையில் மின்சார நிலைய வீதியில் பெரியாஸ்பத்திரிக்குப் பின்புறம் வந்து விழுந்து வெடித்ததில் வீதியில் சென்று கொண்டிருந்த இரு அப்பாவிகள் அந்த இடத்திலேயே துடிதுடித்துச் செத்தனர்.

இந்த ஷெல் வெடித்துப் பறந்ததில் அந்தவீதியிலுள்ள பெரியகடை உபதபால் நிலையத்துக்கு முன்பாகவுள்ள தபால் பெட்டி உடைந்து சிதறி விட்டது. பெட்டியுக்குள் போடப்பட்டிருந்த தபால்கள் பல பஞ்சுமாதிரி கிழிந்து சிதறி விட்டன. சில தபால்கள் மட்டும் தப்பின.

நான் மேலே குறிப்பிட்ட பிறந்த நாள் வாழ்

இஸ்ரேலிய இராணுவத்துக்கு இஸ்ரேலிய மொஸாட் பயிற்சியளித்தது ஜனாப் எம். எச். முகம்மதுக்கு நன்கு தெரியும்.

இஸ்ரேலிய மொஸாட் பாணியில் இலங்கை அரசபடைகள் வடக்கிலும் கிழக்கிலும் ஷெல் அடியும் குண்டுவீச்சும், ஹெலித்தாக்குதலும் நடத்தியதையும் கிழக்கில் மட்டுமல்ல வடக்கிலும் கூட அப்பாவித் தமிழ் இஸ்லாமிய மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டதும் ஜனாப் எம். எச். முகம்மதுக்கு நன்கு தெரியும்.

இப்பொழுதும் கூட அதே மொஸாட் பாணியில் வடக்கிலும் கிழக்கிலும் ஷெல்அடியும் ஹெலித்தாக்குதலும் குண்டுவீச்சும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஜனாப் முகம்மது அமைச்சராக இருந்த சமயத்தில் பாகிஸ்தானின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு பாகிஸ்தானுக்கு அடிக்கடி சென்றுவந்தார். சிறிது உதவியும் பெற்றுவந்தார். ஆனால் இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவை இங்கிருந்து அமைச்சர் முகம்மதினால் அசைக்கவே முடியாமல் போய்விட்டது.

அமைச்சர் முகம்மது இப்பொழுது பிரேமதாசா அரசில் பாராளுமன்றத்தின் சபாநாயகராக இருக்கிறார்.

சபாநாயகராக இருப்பவர் பாராளுமன்றத்தில் மட்டுமல்ல வெளியிலும் கௌரவத்துக்குரியவர்.

எந்தப்பக்கமும் சாராமல் நடுநிலைநின்று நீதி சொல்லவேண்டியவர் சபாநாயகர். பொதுத் தேர்தல் வரும்போது சபாநாயகருக்கெதிராக எந்தக் கட்சியும் வேட்பாளரை நிறுத்தக்கூடாது என்பது பாராளுமன்ற ஜனநாயகத்தில் சம்பிரதாயம். சபாநாயகர் என்ற பெயரில்தான் தேர்தலில் போட்டிக்கு நிற்பதும் மரபு!

இவ்வளவு கௌரவத்துக்குரிய சபாநாயகர் எம். எச். முகம்மது பத்திரிகை நிருபர்கள் மாநாடு நடத்தி வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப்புலிகளுக்கு இஸ்ரேலியர் பயிற்சியளிக்கிறார்களென்று அப்பட்டமான அபாண்டமான பொய்யைக்கூறியிருக்கிறார்.

கிழக்கிலும் வடக்கிலும் இந்த நெருக்கடியிலும் ஒற்றுமையாக வாழும் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரித்துவைப்பதற்கு சகுனிவேலைசெய்யலாம் என்று சபாநாயகர் முகம்மது நினைக்கிறார் போலும்!

சபாநாயகர் என்ற கௌரவத்தையே குலைத்து விட்டார் ஜனாப் எம். எச். முகம்மது.

# குருநகர் மக்கள் இடம் பெயர்கின்றனர்

(விசேட நிருபர்)

நேற்று காலை நடைபெற்ற ஷெல், ஹெலி தாக்குதல்களைத் தொடர்ந்து குருநகர் பகுதி மக்கள் பாதுகாப்புத் தேடி இடம் பெயர்ந்துசென்று கொண்டிருந்தனர்.

சென் பற்றிக்ஸ் கல்லூரி, பாசையூர் சென்; அந்தோனியார் ஆலயம் என்பவற்றில் தஞ்சமடைந்தனர்.

இன்னும் சிலர் மண்ணித்தலை, கல்முனை - பூநகரிப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்று கொண்டிருந்தனர்.

குருநகர் புதிய சந்தை (சின்னக்கடை) வெறிச்சோடிக் காணப்பட்டது.

மீன்சந்தைப் படுத்தும் வாடியில் அதிகாலை கூடிய மக்கள் தாக்குதலை அடுத்து தொடர்மாடிப் பகுதிக்கு மாற்றப்பட்டு மீன்கள் சந்தைப்படுத்தப்பட்டன.

காலை 10-00 மணிக்கு பிற்பாடு அமைதி ஏற்பட்டிருந்த போதும் இடையிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன. (21)

ணின் இறப்பைப்பதிவு செய்ய பிறப்புச் சான்றிதழ் தேவைப்பட்டதால் யாழ்/கச்சேரியில் பிறப்புப் கொப்பி எடுப்பதற்கான விண்ணப்பம்

## மக்கள் மடல்

2-5-90 இல் செய்த போது 31-05-90 கைக்கு வரும் என உயர் அதிகாரி தெரிவித்தார். 11-06-90வரைபிறப்புப் பத்திரம் வராததால்நேரில்சென்று விசாரித்த போது பிறப்புப் பத்திரம் சம்பந்தமாக நான் கொடுத்தவிண்ணப்பம் கவுண்

கலங்கி நிற்கிறார்கள். மரணமானவர் போராட்டத்தில் இறந்தவர்என்றுகூடஉரியநேரத்தில்உதவி புரியமறுக்கிறார்கள். வன்செயல்களில் மரணமானவர்களின் இழப்புக்கள் பதிவு செய்து நஷ்ட ஈடு பெற எத்தனையோ குடும்பங்கள் காத்திருக்க இவர்களின் அசட்டையால் எல்லாமே பூச்சியமாகி விடும்போல் தெரிகிறது. கவுண்டரில்கொடுத்து காணாமல் போன விண்ணப்ப இல A15412. 2/5/90 இது போன்ற தவறுகள் இனியும் தொடர சம்பந்தப்பட்டவர்கள் இடமளிக்ககூடாது.

எஸ். ஆனந்தன்

## முல்லை

# வட்ட அவைத் தெரிவுகள்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட வட்ட அவைத் தெரிவுகள் பரவலாக நடைபெற்று வருகின்றன. 13ந் திகதி முல்லைத்தீவிலும் 14ந் திகதி புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் 15ம்திகதி நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் நடைபெற்றன. 16, 17ஆம்திகதிகளில் துணுக்காய் பாண்டியன்குளம் பகுதியிலும் நடைபெற உள்ளது. (58)

# மன்னாரில் பதட்ட நிலை தள்ளாடியில் இருந்து ஷெல்வீச்சு

(மன்னார்)

மன்னார் பொலிஸ் நிலையம் புலிகள் வசமானதைத் தொடர்ந்து-பொலிசார் புலிகளிடம் சரணடைந்தனர். கடந்த வியாழன் இரவு பன்னிரண்டு மணியிலிருந்து தள்ளாடி முகாமிலிருந்து ஷெல் வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. தள்ளாடி மூகாமைச் சூழ்ந்தநிலையில் விடுதலைப் புலிப் போராளிகள் எதற்கும் தயார் நிலையில் நிற்கின்றனர்.

மன்னார் நகரத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது. நகர்ப் புற மக்கள் கடல் வழியாக பாப்பாமோட்டை, அடம்பன் பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்து வந்துகொண்டிருக்கின்றனர் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் வாகனங்கள் யாவும் மாந்தைச் சந்தியுடன்.திரும்பி வருகின்றன.

இச் ஷெல் வீச்சினால் சாபியால்ஸ்ரோர்ஸ் உரிமையாளர் மரணமானார். அவரது மகள் காயமடைந்துள்ளார்.

# மின்நிலையம் இந்து விடுதியில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வீதி பட்டினவீதி உப-மின்நிலையம் நல்லூர் இந்து விடுதியில் இயங்க உள்ளது. நகரில் பிரச்சினைகள் எழும் நேரங்களில் மாத்திரமே நல்லூர் விடுதியில் இயங்க உள்ளதாகவும், ஏனைய நேரங்களில் வழமை போல் பழைய இடத்திலேயே இயங்கும் என்றும் மின்சார நிலையத்தினர் தெரிவித்துள்ளதுடன், தாக்குதல் சம்பவங்கள் நடைபெறும் நேரங்களில் மின்சாரம் முற்றாக நிறுத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

# வருடாந்த பொதுக் கூட்டம்

(கொழும்புத்துறை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சன சமூக நிலையங்களின் சமாச வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் வைத்திய கலாநிதி இ. சற்குருநாதன் தலைமையில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளனத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா, சம்மேளனத்தலைவர் திரு. இ. தவகோபால் ஆகியோர் பிரதமவிருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (24)

தற்போது உற்பத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட 40 குளோறின் காஸ் சிலிண்டர்கள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ். செல்லச்சாமியிடம் நேற்று மாலை ரன்முத்து கல களஞ்சியச் சாலையில் வைத்து ஒப்படைக்கப்பட்டது

# சமய பாடப் பரீட்சை

(கொழும்புத்துறை)

கொச்குவில் ஞானபண்டித வித்தியாலையத்தில் கோட்டயம் பதி சிவசுப்பிரமணிய இளைஞர் மன்றத்தால் சமய பாடப் பரீட்சை நடாத்தப்பட்டது. மன்றத்தலைவர் நா. மல்வாகனம், செயலாளர் வே. அழகரத்தினம் மற்றும் உறுப்பினர்கள் பரீட்சை மேற்பார்வையாளராக பணிபுரிந்தனர்.

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய உறுப்பினர்களுக்கான பொதுக் கூட்டம் வரும் புதன்கிழமை (20-6-90) பிற்பகல் நான்கு மணிக்கு நடைபெறும் என இக்கழகத்தின் தலைவர் அறிவித்துள்ளார். சகல உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# திருமலையிலிருந்து அகதிகள் படகு

(முல்லைத்தீவு)

திருக்கோணமலையிலிருந்து முல்லைத்தீவுக்கு பெருமளவில் அகதிகள் வந்த வண்ணமிருக்கின்றனர். மூன்று வள்ளங்கள் திருமலைக்கும் முல்லைத்தீவுக்குமிடையே திருமலை அகதிகளை ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன. (58)

# புதிய வேதனம் இல்லை

(மன்னார்)

கடந்த வருடம் புரட்டாதி மாதம் 27ஆம் திகதியிடப்பட்ட உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 47/ 89 இலக்கமிடப்பட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் நூலகப் பொறுப்பாளர்களுக்கான புதிய வேதனப் படிகள் மாந்தை மேற்கு பிரதேச சபையினால் இன்னமும் வழங்கப்படவில்லை.

மேற்படி புதிய வேதனம் ஏனைய பிரதேச சபைகளால் கொடுப்பனவு செய்யப் பட்டுள்ள நிலையில் தமக்கு மாத்திரம் ஏன் இந்தத் தாமதம் எனச் சம்பந்தப்பட்ட நூலகர்கள் முறையிட்டுள்ளார்கள். (60)

தற்போது அடுத்த சுற்று வட்டத்துக்கு கமரூன் தகுதி பெற்றுவிட்டது. இன்னொரு ஆட்டத்தில் யூகோஸ்லாவியா கொலம்பிய அணியை 1 0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளது. 'ஏ' பிரிவு ஆட்டமொன்றில் 3 முறை உலகச் சம்பியன்களான இத்தாலி 1-0 என்ற வித்தியாசதில் ஐக்கிய அமெரிக்காவைத் தோற்கடித்துள்ளது.

இன்றைய ஆட்டங்கள்:

'சி' பிரிவு - பிரேசில் - கேஸ்டாரிக்கா 'எப்' பிரிவு இங்கிலாந்து - ஒல்லாந்து.

# யானை தாக்கி மரணம்

(மன்னார்)

தோட்டக் காவலில் ஈடுபட்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் காட்டு யானையால் தாக்கப்பட்டு மரணம் அடைந்தார் இச்சம்பவம் செவ்வாய் இரவு கூராய் ஆற்றுக்குடியேற்றப்பகுதியில் நிகழ்ந்தது. செல்வம் என அழைக்கப்படும் இந்நபர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். (60)

# சுயதொழில் வாய்ப்பு

(கொழும்புத்துறை)

யாழ். சைவத் தொண்டர் நிலையமும் தொண்டர்களுக்குச் சுயதொழில் வாய்ப்புக்கான பயிற்சிகளை அளித்து வருகின்றது. நிலைய அமைப்பாளரும், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தொண்டர் சேவை ஆணையாளருமாகிய திரு. இ.சுவாமிநாதன் இப்பயிற்சிக் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து வருகின்றார்.

சவர்க்கார உற்பத்தி தொழில் பற்றிய செய்முறைப் பயிற்சிகள் சைவத் தொண்டர்களுக்கு மில்க்வைற் தொழிலகத்தில் அளிக்கப்பட்டது. ''மில்க்வைற்'' அதிபர் சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராஜா ((ச. நீ) பயிற்சியாளர்களுக்கு கருத்துரைகள் வழங்கினார். (24)

# இளைப்பாறினார்

(மன்னார்)

விடத்தற்தீவு கொத்தணிக்கு உட்பட்ட ஆத்திமோட்டை அ.த.க. பாடசாலை அதிபர் கவிஞர் பொன். சிவசாமி அவர்கள் கடந்தமாதத்துடன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

சமூக சேவையாளரான இவர் சிறந்த கவிஞரும், நாடகாசிரியருமாவார். இவரது இடத்துக்கு இலுப்பக்கடவை மகா வித்தியாலய ஆசிரியர் திரு.எம் பஞ்சலிங்கம் அவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார். (60)

ருந்த இரு அப்பாவிகள் அந்த இடத்திலேயே துடிதுடித்துச் செத்தனர்.

இந்த ஷெல் வெடித்துப் பறந்ததில் அந்தவீதியிலுள்ள பெரியகடை உபதபால் நிலையத்துக்கு முன்பாகவுள்ள தபால் பெட்டி உடைந்து சிதறி விட்டது. பெட்டியுக்குள் போடப்பட்டிருந்த தபால்கள் பல பஞ்சுமாதிரி கிழிந்து சிதறி விட்டன.சில தபால்கள் மட்டும் தப்பின.

நான் மேலே குறிப்பிட்ட பிறந்த நாள் வாழ்த்து மடல் என்வலப் கிழிந்து சிதைந்து தனியாக வெளியே கிடந்தது. எனக்குக் கிடைத்துள்ள மற்றும் சில கடிதங்கள் விபரம் வருமாறு.

பருத்தித்துறை பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத் தலைவருக்கு லச்சுமி அச்சகம் அனுப்பியது. மட்டக்களப்பு தாமரைக் கேணியில் இ. அரியநாயகத்துக்கு அனுப்பிய கடிதம் திருக்கோணமலை அன்புவழிபுரம் ஆ. செல்வநாச்சியாருக்கு விலாசமிட்ட கடிதம்.

தமிழ்நாடு சென்னை மடிப்பாக்கம் எஸ். ஜெகதீசனுக்கு அனுப்பிய கடிதம், மேற்கு ஜெர்மனி (Colbe) ரி. கதிர்காமலிங்கத்துக்கு பூநகரியிலிருந்து அனுப்பிய கடிதம், சவூதி அரேபியா, றியாத்திலுள்ள அக்கவுண்டன் ஏ. எஸ். கருணாநிதிக்கு வேலணையிலிருந்துஅவர் மனைவி எழுதிய கடிதம், மேற்கு ஜெர்மனி பொன் நகரிலுள்ள எஸ். காஞ்சனாவுக்கு பூநகரியிலிருந்து எழுதிய கடிதம், றியாத்திலுள்ள கே. அருள்குமரனுக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலிருந்து அனுப்பிய கடிதம்.

இவை என்னிடம் இருக்கின்றன. இக்கடிதங்கள் பரிதாப நிலையில் என்னைப் பார்த்துக் கிடக்கின்றன.

உரியவர்கள் விரும்பினால் 'ஈழநாதம்' அலுவலகத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளலாம்.

இல்லலயேல் தபால் சேவை மீண்டும் ஆரம்பமானதும் தபால் பெட்டிக்குள் போட்டு விடுகின்றன.

Registered as a News Paper at the G. P. O.

# ஈழநாதம்

## ஜூலையில் அறிவிப்பு

(கண்டி)

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடாத்துவதற்குரிய திகதி பாராளுமன்றத்தில் ஜூலை மாதம் 5 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ நேற்று கண்டியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கூறினார்.

# இலங்கைத் தமிழர் நிலைபற்றி சிங் - கருணாநிதி ஆலோசனை



(சென்னை)

தற்போதுள்ள வடக்கு கிழக்கு நிலைமைகள் குறித்து பிரதமர் வி. பி. சிங்குடன் பேச்சுவார்த்தை நடாத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி இன்று ஞாயிற்றுக்கிழமை புதுடில்லி செல்லவுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் வி. பி. சிங் தம்முடன் தொலைபேசி மூலம் பேசியதாகவும், விவாதிக்க புதுடில்லிக்கு வருமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் வி. பி. சிங்குடன் பேச்சு நடாத்திய பின்னர் சென்னையில் இலங்கைப்பிரச்சினை குறித்து சகல கட்சிகளின் மாநாட்டையும் தேவையேற்பட்டால் கூட்டப்போவதாகவும் முதல்வர் மேலும் கூறினார்.

இந்தியாவின் சட்டத்தை மீறும் வகையில் எந்தவொரு போராளியும் இங்கு நுழையக்கூடாது என்பது தமிழக அரசின் உறுதியான கருத்து என்றும் அவர் தெரிவித்தார்.



## யாழ்நகரில் மா விலை திடீர் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கிலும்- கிழக்கிலும் கடந்த ஆறு நாட்களாக புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படைகளுக்கும் நடந்து வரும் போரைப் பயன்படுத்தி கடை வியாபாரிகள் முக்கியமாக உணவுப் பண்டங்களை யானை விலை விற்கிறார்கள்.

யாழ். குடாநாட்டில் மா ஒரு மூடை வழமையான விலையை விட ரூபா 400 அதிகமாக விற்பனையாகின்றது. அத்துடன் வியாபாரிகள் பண்டங்களைப் பதுக்கி ஒரு செயற்கையான தட்டுப்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

## கோல்லன்கலட்டிக்கு செல்ல 600 ரூபாவாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரியில் இருந்து கொல்லன் கலட்டிக்கு செல்வதற்கு ஒரு ஓட்டோகாரர் 600 ரூபா கேட்டார்.

பெற்றோல் ஒரு போத்தல் 75 ரூபா எனவும் அதற்கு குறைவாக கட்டுப்படியாகாது எனவும் அச் சாரதி கூறினார்.

இத் தொகையானது வழமையாக பெறப்படும் தொகையைவிட நான்கு மடங்கு அதிகமானது என்று அருகில் நின்றவர்கள் பேசிக்கொண்டார்கள். நாட்டின் குழப்பம் சிலருக்கு லாபம், சிலருக்கு நட்டம்.

## ஹெலி தாக்குதலுக்கு பெண் பலியானார்

## தமிழர்கள் அம்பாறையில் வெட்டிக்கொலை!

அம்பாறையில் தமிழ் மக்களின் குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்த சிங்களக் காடையரும், இராணுவத்தினரும் நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்களைக் கண்டபடி வெட்டிக் கொலை செய்ததாக அப்பகுதியிலிருந்து கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

## யாழ். நகரில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை நிகழ்ந்த ஷெல் தாக்குதலினால் நகரம் வெறிச்சோடியது. வீதிகளில் நின்றவர்களும் அங்கும் இங்கும் ஓடித்தப்பினர்.

யாழ் பஸ் நிலையப்பக்கம் நின்ற டாக்ஸிகள், ஓட்டோக்கள் ஓடி மறைந்தன.

தூர இடங்களுக்கு செல்வதற்கு வாகன வசதியின்றி பலர் அவதியுற்றனர்.

யாழ். பெரியாஸ்பத்திரியில் இருந்த சில நோயாளிகள் தலையணை மற்றும் பொருட்களுடன் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி வீதிகளில் நின்றதையும் காணக்கூடியதாக இருந்தது.

ஆரியகுளம் சந்தியில் இருந்தும் வின்சர் சந்தியில் இருந்தும் சில மினிபஸ்கள் சேவையில் ஈடுபட்டன.

### போர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியஉதவிகள் வழங்கவும் நோயாளிகளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லவும், தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு மருந்து வகைகள் உணவுப் பொருட்கள் வழங்கவும் இருதரப்பினரும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைதியும் சகஜ நிலையும் மீண்டும்ஏற்படுத்தும் வகையில் அமைச்சர் ஹமீதும் விடுதலைப்புலிகளின் தலைவர்களும் இப்பகுதிகளுக்கு நாளை திங்கள் முதல் விஜயம் செய்வார்கள்.

# ஷெல் அடி, ஹெலி சூடு; இச்சமயம் திருடர் கைவரிசை!

(யாழ்ப்பாணம்)

யாழ். நவீன சந்தையில் உள்ள சில கடைகளைத் திருடர்கள் உடைக்க முயன்றபோது அவர்கள் விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை கோட்டை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்களும் வானத்தில் ஹெலித்தாக்குதல்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திருடர்கள் தமது கைவரிசையில் ஈடுபட்டனர்.

இதேசமயம் மற்றொரு கடை உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்களை சிலர் எடுத்துச் சென்றனர்.

ஷெல் தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தை இவர்கள் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டனர்.

இதேசமயம் இச்சம்பவத்தை கேள்வியுற்ற சில வர்த்தகர்கள் தத்தமது கடைகளுக்கு வந்து காவல் நின்றனர்.

வேறு சில கடை உரிமையாளர் பொருட்களை அப்புறப்படுத்தினர்.

# கோட்டை ஷெல் அடிக்கு டாக்டரும் மற்றுமிருவரும்பலி!

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்துநேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்கள் காரணமாக விடுதலைப்புலிகளின் போராளிகள் மூவர் வீரமரணமடைந்தனர். பொதுமக்களில் மூவர் பலியானார்கள்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்த அமைச்சர் ஹமீத் நேற்றுக்காலை வரும் வரை மூன்றுமணி நேரப் இந்த ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றன.

இதனால் வீரசிங்கம் மண்டபம், முனீஸ்வரம் ஒழுங்கை, நவீனசந்தை, சாந்தி தியேட்டர் முன்புறம், யாழ் மத்திய கல்லூரி முன்புறம், ஆஸ்பத்திரிக்குபின்புறமாகவுள்ள பெரிய கடை உபதபால் நிலையம் முன்புறம். ஷெல்கள் விழுந்து வெடித்தன.

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள வண்ணான் குளத்தில் விழுந்த ஒருஷெல் வெடிக்காத நிலையில் காணப்பட்டது.

சுபாஸ் ஹொட்டலின் ஊழியரான குமாரசாமி (60வயது) டாக்டர் சபாரத்தினம், இனம் தெரியாதநபர் ஒருவர் உட்பட மூன்றுபேர் பொதுமக்களில் கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகளில் மூவரும் பொதுமக்களில்இருவரும் இச்சம்பவத்தால் காயமடைந்தனர். (ம)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரண ஏற்பாடு!

## ஆய்வு நிறுவனம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தில் கடந்த சில தினங்களாக நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்பட்ட இடம் பெயர்ந்த மக்களுக்கு உடனடி நிவாரணம் மேற்கொள்ள தமிழீழ ஆய்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது சம்பந்தமான விசேட கூட்டம் நடைபெற்ற போது அரசசார்பற்ற பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் அவலநிலை குறித்து அனைவரும் தமது உணர்ச்சி பூர்வமான கருத்துக்களை இங்கு தெரிவித்தனர்.

ஒருங்கிணைந்த நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் அவை முன்வந்துள்ளன.

முதற்கட்டமாக கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரண நிதிஒன்றை உடனே ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி நிதிமூலம்கிழக்கில் நிவாரண வேலைகள் தொடரும் பொறுப்பு தமிழீழ ஆய்வு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

வடக்கில் மருத்துவ, இடம் பெயர்ந்தோர் பராமரிப்பு பணிகளை சகல ஸ்தாபனங்களும் ஒருங்கிணைந்து உடனடியாக ஆரம்பிப்பது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சகல பொது ஸ்தாபனங்களும் 24 மணிநேரமும் தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

தேவைஏற்பட்டால் அடுத்த கட்ட நடவடிக்கைகளை ஆராய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பாதிப்புக்கள், அவசியநிவாரணம் என்பன தொடர்பாக கூட்டாகசெய்திவெளியிடுவது எனவும் இங்கு முடிவு செய்யப்பட்டது.

## வெல்லான்குளத்தில் தமிழர் மீது தாக்குதல்

(திருக்கோணமலை)

திருக்கோணமலையிலுள்ள வெல்லான்குளம் எனும் கிராமத்தில்உள்ள தமிழர்கள் ஊர்காவல் படையினரால் பயங்கரமாகத் தாக்கப்பட்டனர்.

வெல்லான் குளத்திலுள்ள தமிழர்களின் வீடுகளினுள்ளே புகுந்த ஊர்காவல் படையினர் பெண்கள், குழந்தைகள் உட்பட வீடுகளில் இருந்த அனைவரையும் தாக்கினர். வீதிகளில் கண்ட தமிழரை எல்லாம் வாள், கத்தி போன்ற ஆயுதங்களால் வெட்டியும், குத்தியும் தாக்கினார்கள். இதனால்பீதியடைந்த தமிழ்க் குடிமக்கள் அவ் வூரைவிட்டு வெளியேறினர். இதில் முன்னூறு குடும்பங்கள்வரை தம் பலகாமத்திற்கு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். (மு)

## நேற்றைய தாக்குதலில்

ளுக்கும் நடந்து வரும் போரைப் பயன்படுத்தி கடை வியாபாரிகள் முக்கியமாக உணவுப் பண்டங்களை யானை விலை விற்கிறார்கள். அத்துடன் வியாபாரிகள் பண்டங்களைப் பதுக்கி ஒரு செயற்கையான தட்டுப்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

# கோல்லன்கலட்டிக்கு செல்ல 600 ரூபாவாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரியில் இருந்து கொல்லன் கலட்டிக்கு செல்வதற்கு ஒரு ஓட்டோகாரர் 600 ரூபா கேட்டார்.

பெற்றோல் ஒரு போத்தல் 75 ரூபா எனவும் அதற்கு குறைவாக கட்டுப்படியாகாது எனவும் அச் சாரதி கூறினார்.

இத் தொகையானது வழமையாக பெறப்படும் தொகையைவிட நான்கு மடங்கு அதிகமானது என்று அருகில் நின்றவர்கள் பேசிக்கொண்டார்கள். நாட்டின் குழப்பம் சிலருச்கு லாபம், சிலருக்கு நட்டம்.

# ஹெலி தாக்குதலுக்கு பெண் பலியானார்

(விசேடநிருபர்)

நேற்று சனிக்கிழமை காலை6-30, மணியளவில்யாழ் கோட்டை இராணுவம் வெளியேற முயற்சித்ததை தடுத்து நிறுத்தபுலிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சண்டையைத் தொடர்ந்து நடை பெற்ற ஷெல், ஹெலி தாக்குதல்களில் குருநகர், மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த செல்வி மேரிகொலஸ்ரிக்கா றப்பியேல் (வயது22) ஹெலித் தாக்குதலால் கொல்லப்பட்டார்.

றெக்கிளமேசன், பாக்ரோட்டில் ஒருவர் அதிர்ச்சியினால் இறந்து கிடக்கக் காணப்பட்டார். அவரது சடலம் செய்தி எழுதப்படும் வரையில் அடையாளம் காணப்பட வில்லை.

இராஜேந்திரா வீதியைச் சேர்ந்த எம். அருளப்பு(வயது 53) கண்ணில் காயமேற்பட்டு கடற்கரை வீதி திருச்சிலுவை சுகநல சேவை நிலையத்தில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(21)

# கொழும்பில் அவசர சிகிச்சைப் பிரிவு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்காஇராணுவத்தினருக்குமிடையில் கடந்த ஆறு தினங்களாக நடந்து வரும் யுத்தத்தைத் தொடர்ந்து கொழும்பு அரசாங்க மருத்துவமனையில் அவசர சிகிச்சைக்காக மருத்துவப் பிரிவொன்று பிரத்தியேகமாக தயார் நிலையில் வைக்கப்பட்டுளளது.

20 அம்புலன்ஸ் வண்டிகள் கொழும்புக்கும் இரத்மலானை விமானநிலையத்துக்கு மிடையில் விசேட சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்பு, திருக்கோணமலை மாவட்டங்களில் காயமுற்ற ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய்களை இரத்மலானை விமான நிலையத்திலிருந்து மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் பணியில் அம்புலன்ஸ் வண்டிகள் ஈடுபட்டுள்ளன. கொழும்பு மருத்துவ மனையில் இராணுவத்தினருக்கென தீவிர சிகிச்சைப் பிரிவொன்றும் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை கொழும்பிலிருந்து வைத்திய நிபுணர்கள் சத்திர சிகிச்சை டாக்டர்கள் தாதிமார்கள் அடங்கிய குழுக்கள் மட்டக்களப்புக்கும் திருகோணமலைக்கும் விசேட விமானங்களில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவு

வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய முன்றலில் கடந்த பதினொராம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட பொது விளையாட்டரங்கு புனருத்தாரண அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள் வெளிவந்துள்ளன.

இதற்கா முதலாம் பரிசு 9126 இலக்கத்திற்கும் இரண்டாம் பரிசு 45863 இலக்கத்திற்கும் மூன்றாம் பரிசு 2711 இலக்கத்திற்கும் நான்காம் பரிசு 34852 இலக்கத்திற்கும் ஐந்தாம் பரிசு 38612 இலக்கத்திற்கும் கிடைக்கப்பெற்றது.

இப் பரிசிற்குரியவர்கள் ஒரு மாத காலத்திற்குள் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம். (58)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# யாழ். நகரில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை நிகழ்ந்த ஷெல் தாக்குதலினால் நகரம் வெறிச்சோடியது. வீதிகளில் நின்றவர்களும் அங்கும் இங்கும் ஓடித்தப்பினர்.

யாழ் பஸ் நிலையப்பக்கம் நின்ற டாக்ஸிகள், ஓட்டோக்கள் ஓடி மறைந்தன.

தூர இடங்களுக்கு செல்வதற்கு வாகன வசதியின்றி பலர் அவதியுற்றனர்.

யாழ். பெரியாஸ்பத்திரியில் இருந்த சில நோயாளிகள் தலையணை மற்றும் பொருட்களுடன் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி வீதிகளில் நின்றதையும் காணக்கூடியதாக இருந்தது.

ஆரியகுளம் சந்தியில் இருந்தும் வின்சர் சந்தியில் இருந்தும் சில மினிடஸ்கள் சேவையில் ஈடுபட்டன.

## போர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியஉதவிகள் வழங்கவும் நோயாளிகளைஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லவும், தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு மருந்து வகைகள் உணவுப் பொருட்கள் வழங்கவும் இரு தரப்பினரும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைதியும் சகஜ நிலையும் மீண்டும்ஏற்படுத்தும் வகையில் அமைச்சர் ஹமீதும் விடுதலைப்புலிகளின்தலைவர்களும் இப்பகுதிகளுக்கு நாளை திங்கள் முதல் விஜயம் செய்வார்கள்.

## போரை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பேச்சுவார்த்தைகளில் பின்வரும் முடிவுகளில் சுமுகமாக இணக்கம் காணப்பட்டுள்ளது.

கடந்த ஆறுநாள் யுத்தத்தில் தமிழ் பகுதிகள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டு மூடப்பட்ட பொலிஸ் நிலையங்களைமீண்டும் காலக்கிரமத்தில் படிப்படியாக திறந்து அங்கு தமிழ்ப் பொலிசாரை இயங்க விடவும் இணக்கம் காணப்பட்டது.

இதேபோல கடந்த நாட்களில் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தசிறிலங்காபொலிசாரை விடுதலை செய்யவும் இரு தரப்பிலும் பேச்சுக்கள் நடத்தப்பட்டது.

காயமடைந்த இராணுவத்தினரை வைத்திய வசதிகளுக்காக இடமாற்றம் செய்யவும். விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்ட சிறிலங்கா இராணுவ முகாம்களுக்கு மருந்து, உணவுவகைகள் என்பனவற்றை அனுப்பி வைக்கவும் விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பர். இவ்விடயத்தில் தேவை ஏற்படின் மனித உரிமைகள் ஸ்தாபனங்களின் உதவியையும் அரசு நாடலாம். இத்துடன்ஏனைய முக்கிய விடயங்கள் பற்றி தீர்மானிப்பதற்கானபேச்சுவார்த்தைகள் நடத்துவது பற்றி காலக்கிரமத்தில் தீர்வுகாணப்படும்.

இறுதியாக பேச்சுக்களின் போது சிறிலங்கா நீதி அமைச்சர் ஹமீத்தும் விடுதலைப் புலிகள்தலைவர்களும் தமிழீழ பகுதி மாவட்டங்கள் அனைத்திலும் சமாதானத்தையும் சகஜ வாழ்வையும் விரைவில் ஏற்படுத்த வேண்டியதற்கான முழு ஒத்துழைப்பையும் செய்வதென உடன்பாடு கொண்டனர். (அ)

# நேற்றைய தாக்குதலில் காயமடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியின் பல்வேறு இடங்களில் நேற்று நடந்த தாக்குதல் சம்பவங்களினால் விடுதலைப் புலிகள் பலர் காயமடைந்துள்ளனர். இவர்களில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்களின் விபரங்கள்வருமாறு.

மாங்குளத்தில் நடந்த தாக்குதலின்போது காந்தன், வேந்தன் (வயது 18), போலோ (வயது 23), லதீப் (வயது 18), அமுது (வயது20) தவம் (வயது 23), லவன் (வயது19), பாலன் (வயது16), டக்லஸ் (வயது18), காஸ்ரோ(வயது 19), சித்தார்த்தன், அரி, பிரசாத், ரகுமான், பண்டிதர் ஆகிய பதினைந்து பேரும், யாழ் கோட்டை தாக்குதலின்போது மகேந்தி (வயது23), நிமலன் (வயது16), மாவி ஆகிய மூவரும், முல்லைத்தீவுத் தாக்குதலில் தம்பி (வயது 19) ஆகியோரும் காயமடைந்துள்ளனர். மேலும் யாழ். கோட்டைத் தாக்குதலில் ஜெயராஜ்(வயது25) என்பவர் உட்பட மூன்று விடுதலைப் புலிகள் மரணம் அடைந்தனர். எல்லாமாக நாற்பதுக்கும் மேற்பட்டோர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம)

## ஹமீத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ காவல் அரண்களுக்குள் நின்ற சிப்பாய்கள் திரு. டொமினிக் மீது திடீரென துப்பாக்கிப்பிரயோகம்செய்தனர்.

அச்சமயம் திரு. டொமினிக் அவர்கள் நிலத்தில் வீழ்ந்து படுத்ததால்காயமெதுவுமின்றி தப்பினார். அத்துடன் பதிலுக்கு விடுதலைப் புலிகளை தாக்கவேண்டாம் என்றும் மறித்துவிட்டார்.

டொமினிக் அவர்களுக்கு துப்பாக்கிப்பிரயோகம் செய்த போது பின்னால் நின்ற அவரது வாகனம் பலத்த சேதத்திற்குள்ளாகியது குறிப்பிடத்தக்கதாகும்.

நிலைமையை சுதாரித்துக் கொண்ட டொமினிக் அவர்கள் தொடர்ந்து அமைச்சர் ஹமீத்தை அழைத்து அமைச்சரின் கண்முன்னாலேயே அச்சிறுநேர போர்நிறுத்தம் மீறப்பட்டதை உதாரணமாகச் சுட்டிக்காட்டினார். இதனைத் தொடர்ந்து பிரிகேடியர்நமுனியும், நீதி அமைச்சர் ஹமீத்தும் விடுதலைப் புலிகளிடம் மன்னிப்புக் கோரினர். இந்நேரத்தில் அமைச்சருக்கோ பிரிகேடியருக்கோ எதுவித ஊறுதல்களும் செய்யாத விடுதலைப் புலிகளை மெச்சினர். (அ)

## மாங்குளம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் கைப்பற்றிக் கொண்டுள்ளனர். இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாத்திற்குள்ளானார்கள் இத்தாக்குதலில் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன விடுதலைப் புலிகள் தரப்பில் காயமடைந்தவர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ம)

## யுத்தக்கப்பல்

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை காங்கேசன் துறை ''காபர்வியூ'' ஹொட்டேல் வெடி வைத்து தகர்க்கப்பட்டது. இந்தஹொட்டலுக்கு இராணுவம் நகர முனைந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தாக்குதலின் போது ஏற்பட்ட ஓர் எதிர்பாராத விபத்தில் மேஜர் விவேகன் உட்பட ஐந்து விடுதலைப்புலிகள் களப்பலியாகினர். (அ)

உடனடி நிவாரணம் மேற்கொள்ள தமிழீழ ஆய்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது சம்பந்தமான விசேட கூட்டம் நடைபெற்ற போது அரச சார்பற்ற பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் அவலநிலை குறித்து அனைவரும் தமது உணர்ச்சி பூர்வமான கருத்துக்களை இங்கு தெரிவித்தனர்.

ஒருங்கிணைந்த நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் அவை முன்வந்துள்ளன.

முதற்கட்டமாக கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரண நிதிஒன்றை உடனே ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி நிதிமூலம்கிழக்கில் நிவாரண வேலைகள் தொட

பெயர்ந்தோர் பராமரிப்பு பணிகளை சகல ஸ்தாபனங்களும் ஒருங்கிணைந்து உடனடியாக ஆரம்பிப்பது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சகல பொது ஸ்தாபனங்களும் 24 மணிநேரமும் தொட

ய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பாதிப்புக்கள், அவசியநிவாரணம் என்பன தொடர்பாக கூட்டாகசெய்தி வெளியிடுவது எனவும் இங்கு முடிவு செய்யப்பட்டது.

# வெல்லான்குளத்தில் தமிழர் மீது தாக்குதல்

(திருக்கோணமலை)

திருக்கோணமலையிலுள்ள வெல்லான்குளம் எனும் கிராமத்தில்உள்ள தமிழர்கள் ஊர் காவல் படையினரால் பயங்கரமாகத் தாக்கப்பட்டனர்.

வெல்லான் குளத்திலுள்ள தமிழர்களின் வீடுகளினுள்ளே புகுந்த ஊர்காவல் படையினர் பெண்கள், குழந்தைகள் உட்பட வீடுகளில் இருந்த அனைவரையும் தாக்கினர். வீதிகளில் கண்ட தமிழரை எல்லாம் வாள், கத்தி போன்ற ஆயுதங்களால் வெட்டியும், குத்தியும் தாக்கினார்கள். இதனால்பீதியடைந்த தமிழ்க் குடிமக்கள் அவ் ஊரைவிட்டு வெளியேறினர். இதில் முன்னூறு குடும்பங்கள்வரை தம் பலகாமத்திற்கு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். (மு)

# பொதுஅறிவுப் போட்டி பின்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தவிர்க்கமுடியாத காரணங்களால் நாளை திங்கட்கிழமை (18 - 6 - 90) அன்று நடைபெற இருந்த 3ஆம சுற்றுக்கான வெற்றிபடைந்த பாடசாலைகளின் பொது அறிவுப் போட்டி குறித்த சில தினங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இது நாளை திங்கட்கிழமை காலை 9·00மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற இருந்தது குறிப்பிடத்தக்கது.

மாணவர்களிடையே கூட்டுறவையும், புரிந்துணர்வையும் அறிவையும் வளர்க்கும் இத்தகைய போட்டிகள் நிச்சயம் எதிர்காலத்தில் எத்தகைய சூழ்நிலைகளிலும் நடாத்தப்படும் எனவும் விடுதலைப்புலிகள் மாணவர்இயக்கம் விடுத்த அறிக்கையில்தெரிவித்துள்ளது

## ஆறுநாள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரவை என்பவற்றை இவர்கள் இழந்துள்ளதால் இந்த திடீர் பின்னடைவு அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்த பின்னடையில் இருந்து புனர் ஜென்மம் எடுப்பதற்கு மேலும் பல உதவி புரியும் உலக நாடுகளை இலங்கை பாதுகாப்பு அமைச்சு நம்பியிருக்க வேண்டி ஏற்பட்டுள்ளது தவிர்க முடியாததாகி உள்ளது எனவும் அவ்வட்டாரங்களில் இருந்து தெரியவருவதும்குறிப்பிடத் தக்கதாகும் (அ)


# மரண அறிவித்தல்

## Dr. சி. சபாரத்தினம்

டாக்டர் சி சபாரத்தினம் அகாலமரணமானார். இவர் சரஸ்வதியின் அன்புக்கணவரும் அருந்ததி(U.K), Dr. விக்கினராஜா (U.K), மகேந்திரராஜா (Australia), தமயந்தி (கனடா)மோகனராஜா (Singapore) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr. திருக்கணேசன், வனஜா, பிரியா, சுசானந்தன் ஆகியோரின் அன்புமாமனாரும் காலஞ்சென்ற திரு. S கனகரத்தினத்தின் அன்புத் தம்பியாருமாவார். அன்னாரின் பூதவுடல் 17-6-90 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து கோம்பையன் மணல் மயானத்துக்கு ஈமக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்

45, வேம்படி றோட்,
யாழ்ப்பாணம்.

R/360